பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 25 ஞாயிற்றுக்கிழமை (10-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:255

# சொந்த வீட்டில் வாழவும், விவசாயம் செய்யவும் எந்தவொரு மனிதருக்கும் உரிமைகள் உண்டு!

## இப்படிக் கூறுகிறார் இராணுவ பொதுசனத் தொடர்பு அதிகாரி

யாழ்ப்பாணம்,ஓக.10

சொந்த வீட்டில் வாழ்வதற்கும், சொந்த நிலத்தில் விவசாயச் செய்கையில் ஈடுபடவும் எந்த மனிதருக்கும் உரிமையுண்டு. இதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இராணுவ பொதுசன தொடர்பு அதிகாரி கேணல் ரத்னாயக்கா.

அரியாலைப் பிரதேசத்தில் உள்ள ஈச்சங்காட்டுப் பகுதியில் விவசாயச் செய்கையில் மக்கள் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குதல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நல்லூர்ப் பிரதேச செயலர் வி.வி.முருகையா தலைமையில் நேற்று இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களுடைய மீள்குடியமர்வு, விவசாய செயற்பாடுகள் தொடர்பாக அரச அதிபர், பொதுமக்கள், பொது நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் பல்வேறு வழிகளிலும் எமக்கு நெருக்கடிகளைத் தருவதுடன், எம்மிடம் பல கேள்விகளையும் கேட்டு வருகின்றனர்.

பொதுமக்களுடைய பிரச்சினைகளை நேரில் பார்க்கவும் - அறிந்து கொள்ளவும், அவை தொடர்பான நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டே என்னைப் பொதுமக்கள் தொடர்பு அலுவலராக நியமனம் செய்துள்ளனர்.

தற்போது இவ்விடயம் சம்பந்தமாக அரச அலுவலர்கள், பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் மக்கள் அமைப்புகளுக்கு இடையில் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் ஒரு சாதகமான சூழல் ஏற்பட்டுவருகின்றது. அந்தவகையில், மக்களின் மீள்குடியமர்வு, தொழில் செய்தல், உயர்பாதுகாப்பு வலயம் போன்ற பிரச்சினைகளில் நல்லதொரு முடிவை ஏற்படுத்தமுடியும்.

அரியாலைப் பகுதியைப் பொறுத்தவரையில் 1995ஆம் ஆண்டின் பின்னர் விவசாய முயற்சிகள் எதுவும் இடம்பெறவில்லை. இடம்பெயர்ந்து

(16ஆம் பக்கம் .பார்க்க)

# பொ.ஐ.மு. - ஜே.வி.பி. உறவில் திடீர் விரிசல்

கொழும்பு,ஓக.10

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைப்பதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் ஜனாதிபதியின் செயற்பாட்டால் இரு கட்சிகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிறன்று இரு கட்சித் தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் கடந்த புதன்கிழமை (06.08.2003) ஜே.வி.பி. தலைவர்கள் மீண்டும் ஜனாதிபதியைச் சந்தித்து மேலதிக பேச்சுக்களை நடத்துவது என முடிவுசெய்யப்பட்டிருந்தது.

அதன்படி கடந்த புதன்கிழமை ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக ஜே.வி.பியின் தலைவர் ரில்வின் சில்வா மற்றும் பொதுச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோர் அடங்கிய உயர் மட்டக்குழு ஒன்று சென்றிருந்தது. (16ஆம் பக்கம் பார்க்க)

### சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள

# முட்டுக்கட்டைகளைக் களைவதற்காக சொல்ஹெய்ம் அடுத்த வாரம் வருகிறார்

கொழும்பு,ஓக.10

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைகளைக் களையும் நோக்கோடு நோர்வே சமாதானக் குழுவின் உறுப்பினர் எரிக் சொல்ஹெய்ம் அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளார். வன்னி சென்று புலிகளின் தலைவர்களையும் அவர் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவரது விஜயத்தின்போது இடைக்கால நிர்வாக சபை மற்றும் குரங்குபாஞ்சான் முகாம் ஆகிய பிரச்சினைகள் தொடர்பாக முக்கியமாக ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சொல்ஹெய்முடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் வன்னி செல்வார்கள்.

குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம் தொடர்பாக நோர்வேயைத் தலையிடுமாறு கண்காணிப்புக்குழு உத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

# சுழிபுரம் மேற்கு கடற்பரப்பிலும் நேற்று இந்திய மீனவர்கள் 4பேர் பிடிபட்டனர்!

## இழுபறியின் பின்னர் நள்ளிரவில் பொலீஸாரிடம் ஒப்படைப்பு

வட்டுக்கோட்டை,ஓக.10


சுழிபுரம் மேற்கு சவுக்கடிக் கடற்பரப்பில் இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் நால்வர் அப்பகுதி மீனவர்களால் நேற்றுப் பிடிக்கப்பட்டனர்; இந்திய மீன்பிடிப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

நேற்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு ஜெகதாப்பட்டினம் என்ற இடத்தைச் சேர்ந்த அமாவாசை ரவிக்குமார் (வயது 40), தங்கவேணு இருமன் (வயது 39), சபாபதி சக்திவேல் (வயது 25), ஆண்டியப்பா ஜீவா (வயது 23) ஆகியோரே சவுக்கடிப் பகுதி மீனவர்களால் பிடிக்கப்பட்டவர்களாவர்.

இவர்களை பொலீஸாரிடம் ஒப்படைப்பது தொடர்பாக எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து அப்பகுதியில் நேற்று மாலை முதல் நள்ளிரவு

(16ஆம் பக்கம் பார்க்க)



நல்லைக் கந்தனின் வீதி வலம்

# அமைச்சர் ஜோன் அமரதுங்க இன்று குடாநாட்டுக்கு வருகை

## பொலீஸ்மா அதிபரும் வருகின்றார்

யாழ்ப்பாணம்,ஓக.10

உள்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தலைமையிலான குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது. பொலீஸ்மா அதிபர் ஆனந்தராஜாவும் அக்குழுவுடன் வருகின்றார்.

இன்று காலை விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணம் வரும் அமைச்சர் குழுவில் உள்துறை அமைச்சின செயலாளர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளும் அடங்கியுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் யுத்தம் காரணமாக சேதமடைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயங்களை மீளப் புனரமைப்பது தொடர்பாக ஆராய்வது இக்குழுவினரின் நோக்கமாகும் என்று கூறப்பட்டது.

அமைச்சர் ஜோன் அமரதுங்க, யாழ் மாவட்ட அரச அதிபர் எஸ்பத்மநாதன், யாழ். மறைமாவட்ட ஆயர் அதி. வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உட்பட பலரையும் சந்தித்துப் பேசுவார்.

சென் பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறும் சமய நிகழ்ச்சி ஒன்றிலும் அமைச்சர் கலந்து கொள்கிறார்.

பண்ணைப் பகுதியில் சிறைச்சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள இடங்களையும் அமைச்சர் சென்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம்,ஓக.10

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் யாழ்ப்பாண விஜயத்தைக் கண்டித்து ஈழத்தமிழின மாணவர் மன்றம் என்ற புதிய அமைப்பு ஒன்று துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளது.

இந்தத் துண்டுப் பிரசுரத்தில் யாழ்.ஆயரின் செயற்பாடுகளுககு எதிராகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

"இராணுவ கெடுபிடிகளுக்குள் மக்களை அழுத்தும் புரிந்துணர்வு உடன்பாட்டினைச் (16ஆம் பக்கம் பார்க்க)

# சீனத் தலைநகரில் இன்று பிரதமர் ரணில் முக்கிய உரை

- பெய்ஜிங்கிலிருந்து ஞா.குகநாதன் -

சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொணடுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் இன்று முக்கிய உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார். இந்த உரையில் இலங்கையின் புனரமைப்புக்கு உதவுமாறு அவர் சீனாவிடம் கோரிக்கை விடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சனாவின் எக்ஸ்மன் மாநில விமான நிலையத்தில் நேற்று நண்பகல் பிரதமர் வந்திறங்கினார். அங்குள்ள அமோசெனிக் தொழிற்சாலையை அவர் நேற்

(16ஆம் பக்கம் பார்க்க)

# கருகிய நிலையில் சடலம் வவுனியாவில் நேற்று மீட்பு!

வவுனியா,ஓக.10

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் எரிந்து கருகிய நிலையில் கிடந்த சடலம் ஒன்றை வவுனியாப் பொலீஸார் நேற்று மீட்டுள்ளனர்.

சுமார் 30 முதல் 35 வயது மதிக்கத்தக்க அந்த நபரின் இடது கை துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. உடலின் பெரும் பகுதி எரிந்து கருகிய நிலையில் காணப்பட்டது.

பொதுமக்கள் கொடுத்த தகவ

(16ஆம் பக்கம் பார்க்க)

# புலனாய்வு உறுப்பினர் ஒருவர் அக்கரைப்பற்றில் சுட்டுக்கொலை!

அம்பாறை,ஓக.10

அம்பாறை மாவட்டம் அக்கரைப் பற்றுப் பகுதியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் குடும்பஸ்தர் வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த சம்பு நாதபிள்ளை விவேகானந்தராஜா (வயது34) என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

ஆரம்பத்தில் ரெலோ அமைப்பில் இயங்கிவந்த இவர், பின்னர் ஈ.பி. ஆர்.எல்.எவ். வரதர் அணியில் சேர்ந்து இயங்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் தங்கியிருந்த இவர்,

(16ஆம் பக்கம் பார்க்க)

# காணி அமைச்சர் நாளை வருகிறார்

யாழ்ப்பாணம்,ஓக.10

காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண நாளை திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் வருகின்றார்.

நாளை காலை 10.30 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் வடக்கு - கிழக்கு சமாதான விளையாட்டு விழா, தேசிய விளையாட்டு விழா தொடர்பாக நடைபெறும் கலந்துரையாடலில் அமைச்சர் கலந்து கொள்வார். (16ஆம் பக்கம் பார்க்க)

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் குடாநாட்டில் இன்று கிடைக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.10

ஜி.ச.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று கொழும்பில் வெளியாகின. நண்பகல் அளவில் அவை இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டன.

பரீட்சைப் பெறுபேறுகள் இன்று யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளுக்குக் கிடைக்கும் என்று யாழ்.வலயக் கலவிப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டுப் பெறுபேறுகளை நேற்றுக் கொழும்பில் வைத்துக் கையேற்

(16ஆம் பக்கம் பார்க்க)

# இரணைமடுக் குளத்திலிருந்து குடாநாட்டுக்குக் குடிதண்ணீர்!

## தேசிய நீர்வழங்கல் அதிகார சபை திட்டம் தயாரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.10

குடாநாட்டுக்குத் தேவையான சுத்தமான குடிதண்ணீரைப் பெறுவதற்கு கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் இருந்து நிலக்கீழ் குழாய்கள் மூலம் தணணீர் எடுத்துவரும் பாரிய திட்டம் ஒன்றை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வகுத்துள்ளது.

இநதத் திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான பெருமளவு நிதியைத் தந்துதவுமாறு வெளிநாடுகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைக்கப்பெற்றாலேயே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் என்று நீர் வழங்கல் அதிகார சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தின் படி இரணைமடுக் குளத்திலிருந்து தண்ணீரைப் பெற்று அதனை சுத்திகரித்து நிலத்தடிக் குழாய்கள் மூலம கொடிகாமத்திற்குக் கொண்டுவருதல் முதற்கட்டம்.

அங்கிருந்து தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பகுதிகளுக்கு அந்த தண்ணீர் நிலத்தடிக் குழாய்கள் மூலம் எடுத்துச்செல்லப்படும். பின்னர் தென்மராட்சியில் இருந்து யாழ்.நகரப் பகுதக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு மிகப் பெருமளவு நிதி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டால் குடாநாடு முழுவதும் சுத்தமான குடிதண்ணீரை விநியோகிக்கமுடியும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கோரியா மற்றும் ஜப்பான் நாட்டு அரச பிரதிநிதிகள் சிலர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது மேற்படி திட்டம் பற்றி அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. உதவி வழங்குவது தொடர்பாக ஆராய்வதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

கிளிநொச்சி இரணைமடுக்குளம் மற்றும் அங்கிருந்து நிலத்திற்குக் கீழாக நீர் எடுத்துவரப்படக்கூடிய இடங்களையும் ஜப்பான் மற்றும் கொரிய பிரதிநிதிகள் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை -

குடாநாட்டின் உடனடி குடிதண்ணீர் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் நிலாவரை மற்றும் பொக்கணை ஆகிய இடங்களிலும் பாரிய கிணறுகளிலிருந்து நிலக்கீழ் குழாய்களின் ஊடாக நீரைப்பெற்று விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் -

இதற்கான வேலைத் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் -

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-4)

# சாவகச்சேரி தபாலகத்துக்கு புதிய கட்டடம் நிர்மாணிப்பு

## நாளை அடிக்கல் நடும் நிகழ்வு

சாவகச்சேரி,ஓக.10

சாவகச்சேரி பிரதம தபால் நிலைய புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் நாளை திங்கள் காலை 9 மணிக்கு சாவகச்சேரி - பருத்தித்துறை வீதியிலுள்ள (தபாலக வீதி) பிரதம தபாலக வளாகத்தில் தபாலக பிரதம தபாலதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

அடிக்கல்லினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் சம்பிரதாய பூர்வமாக நட்டு வைப்பார்.

இப்புதிய கட்டட நிர்மாணத்திற்காக மக்கள் தொடர்பாடல் அமைச்சு சுமார் 68 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அடிக்கல்லை நடுவதற்காக மக்கள் தொடர்பாடல் அமைச்சர் - யாழ்பபாணம் வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இறுதிநேரத்தில் அந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

புதிய கட்டடத்தை இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் -

கணனி மற்றும் தொலைத் தொடர்பு உட்பட சகல வசதிகளையும் கொண்ட தரம் - ஏ அலுவலகமாக யாழ்.பிரதம தபாலகத்திற்கு அடுத்த தரத்தினதாக அமையும் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (ம-31)

# வடமராட்சி மீன்கொள்வனவில் தென்பகுதி வர்த்தகர் ஆர்வம்

வடமராட்சி,ஓக.10

வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் பிடிக்கப்படும் மீன்களை தினமும் கொள்வனவு செய்வதில் தென்பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் மிகுந்த ஆர்வமும், உற்சாகமும் காட்டி வருகின்றனர்.

கொள்வனவு செய்யப்படும் மீன்களை பழுதடையாமல் தென்பகுதிக்கு எடுத்துச் செல்ல வர்த்தகர்களின் குளிரூட்டி லொறிகள் (கூலர் வாகனம்) வடமராட்சி வடக்கு கரையோரத்தில் தினமும் அதிகமான எண்ணிக்கையில் அங்கு கொண்டுவந்து நிறுத்தப்படுகின்றன.

இப்பிரதேச மீனவர்களிடம் கொள்வனவு செய்யப்படும் மீன்களை வர்த்தகர்கள் உடனுக்குடன் தென்பகுதிக்கு எடுத்துச்சென்று சந்தைப்படுத்தி வருகின்றனர். (எ-173)

## வதிவிடப் பயிற்சி

வலி.தெற்கு,ஓக.10

கொழும்பு பல்கலைக்கழக மனித உரிமைகள் சமூக சேவைப்பிரிவு யாழ். மாவட்டத்தில் ஜீ.சீ.ஈ. உயர்தர செயற்றிட்டம் தொடர்பான வதிவிடப் பயிற்சியொன்றினை செயற்றிட்ட இணைப்பாளர்களுக்கு எதிர்வரும் 12,13,14ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடத்தவுள்ளது.

இப்பயிற்சியில் வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை செயற்றிட்ட இணைப்பாளர்கள் கலந்துகொள்ள உள்ளனர். இவர்களுக்கான கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தவறாது இதில் கலந்து கொள்ளவேண்டும் என்றும் வலிகாமம் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-152)

## பிற்போடப்பட்டது

தெல்லிப்பழை,ஓக.10

உடுவில் பகுதி ஆலய நிர்வாகிகளுக்கென இன்று இராமநாதன் கல்லூரியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-10)

## கருத்தரங்குகள்

கொழும்புத்துறை,ஓக.10

சென்.பற்றிக்ஸ் வீதியில் உள்ள அகவொளி நிலையம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை மாலை 3.30 மணிக்கு அகவொளி இயக்குநர் அருட்திரு. இராஜநாயகம் அடிகள் தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் 'கனவும் வாழ்வும்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் க.அன்ரன் டயஸ் கருத்துரை வழங்குவார். (ம-30)

★ ★ ★

வலிகாமம் தெற்கு,ஓக.10

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் ஆசிரியர் அமரர் பண்டிதர் வ.நடராசாவின் நினைவாக நடத்தப்பட்டுவரும் கல்விக் கருத்தரங்குத் தொடரில் அடுத்த கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். வலய ஆசிரியர் நிலைய முகாமையாளர் ச.ரவீந்திரநாதன் இதில் கணிப்பீட்டுக் கருவிகளின் பிரயோகத்தில் புதிய அணுகுமுறைகள் என்ற பொருளில் கருத்துரை வழங்குவார். (எ-152)


★ ★ ★

தெல்லிப்பழை,ஓக.10

யாழ்மாவட்ட லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கான செயற்பாட்டுத் திட்டமிடல் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டப கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

லயன் டாக்டர் பி.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் சகல பிராந்திய லயன்ஸ் கழக நிர்வாகிகள், உறுப்பினர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-150)





திருகோணமலை தம்பலகாமத்தில், வேலையற்ற பெண்களுக்கு தையல் பயிற்சிகளை வழங்கும் பயிற்சி நிலையம் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்றுமுன்தினம் திறந்து வைத்துள்ளது. 20 பெண்களுக்கு அங்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தம்பலகாமம் அரசியல்துறை பொறுப்பாளர் எஸ். துரைமலை நாடா வெட்டி நிலையத்தைத் திறந்து வைத்தார். திருமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திலக், தைப்பதற்குத் தேவையான துணியையும் கத்தரிக்கோலையும் பயிற்சி நிலையப் பொறுப்பாசிரியையிடம் எடுத்துக்கொடுத்து பயிற்சியை ஆரம்பித்துவைத்தார்.

சிறுவர் தினத்தை முன்னிட்டு

# தென்மராட்சி மாணவருக்கு கட்டுரைப் போட்டிகள்

தென்மராட்சி,ஓக.10

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையில் கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

தரம் 4,5 ஆகிய வகுப்பு மாணவர்கள் கீழ்ப் பிரிவாகவும், தரம் 6,7,8 ஆகியவகுப்பு மாணவர்கள் கனிஷ்ட இடைநிலைப் பிரிவாகவும், தரம் 9, 10,11 ஆகிய வகுப்புக்கள் சிரேஷ்ட இடைநிலைப் பிரிவாகவும் தரம் 12,13 வகுப்புகள் உயர் பிரிவாகவும் கருதப்பட்டு இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் எதிர்வரும் செப்ரெம்பர் 20ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். போட்டிக்கான விண்ணப்பங்கள் செப்ரெம்பர் ஐந்தாம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

அனைத்துப் பிரிவுகளுக்குமான போட்டிகளில் 'சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை தடுத்தல்' என்னும் தலைப்பில் கட்டுரை அமைக்கப்படல் வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இப்போட்டிகளை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன், தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்துகின்றது. (எ-117)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,ஓக.10

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் யாழ்.மாவட்ட முன்னணி உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் ஏழாலை கண்ணகி விளையாட்டுக் கழகமும், வல்லை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-86)

# இருவேறு விபத்துகளில் மூவர் நேற்றுக் காயம்

யாழ்ப்பாணம்,ஓக.10

யாழ்ப்பாணம், நீர்வேலிப் பகுதிகளில் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த டொல்பின் வான் யாழ். செயலகப் பகுதியில் விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த மட்டக்களப்பு பல்கலைக்கழக 3ஆம் வருட விவசாயபீட மாணவன் சோமசேகரம் பிரதீபன் (வயது 30) மற்றும் மாத்தளையைச் சேர்ந்த ரஷ்ய டாக்டர் படிப்பினை முடித்த புண்ணியமூர்த்தி அருணா (வயது 32) ஆகியோர் காயமடைந்தனர்.

நீர்வேலியில் இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த வேலாயுதம் மோகன் (வயது 32) என்பவர் படுகாயமடைந்தார். மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-ரி-15)

# பாலகதிர்காம ஆலயத்தின் ஆடிவேல் உற்சவ வீதியுலா

## எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பம்

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலய வருடாந்த ஆடிவேல் வீதியுலா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஆலயத்தில் இருந்து அன்றைய தினம் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம் பருத்தித்துறை வீதி வழியாக முற்பகல் 11 மணிக்கு வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயததைச் சென்றடையவுள்ளது. அங்கிருந்து பிற்பகல் ஒரு மணியளவில் மீண்டும் புறப்பட்டு யாழ். நகர வீதிகள் ஊடாக மாலை 5.30 மணிக்கு வண்ணை சிவன் கோயிலைச் சென்றடையும்.

மறுநாள் புதன்கிழமை காலை 8 மணிக்கு அங்கிருந்து புறப்படும் ஊர்வலம், காங்கேசன்துறை வீதியூடாக வண்ணார்பண்ணை, நாச்சிமார் அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து பிற்பகல் 3 மணியளவில் புறப்பட்டு மாலை 6 மணியளவில் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தை ஆடிவேல் வீதியுலா சென்றடையும்.

மீண்டும் அங்கிருந்து வியாழக்கிழமை காலை 9 மணிக்கு புறப்பட்டு ஆடியபாத வீதி ஊடாகத் திருநெல்வேலியை அடைந்து நண்பகல் 12 மணிக்கு அரசடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தை அடையும்.

பின்னர் பிற்பகல் 3 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடு ஊடாக மாலை 5 மணிக்கு மீண்டும் பாலகதிர்காம ஆலயத்தை வீதியுலா வந்தடையும்.

இம்முறை ஆடிவேல் பவனியில் யானை ஒன்றும் இடம்பெறவுள்ளது. அத்துடன், பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளின் காட்சிகளும் நடைபெறும். (ஒ-10)

# குருமாரின் பாலியல் சேஷ்டை; 55 மில்லியன் டொலர் நஷ்டஈடு!

## கத்தோலிக்க மேற்றாசனம் வழங்கியது!!

றோமன் கத்தோலிக்க குருமார்களால் பாலியல் வக்கிரத்துக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்களுக்கு பொஸ்ரனிலுள்ள கத்தோலிக்க மேற்றாசனம் 55 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

தேவாலயங்களில் குருமார், பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டனர் என்பதை கத்தோலிக்க மேற்றாசனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஆயர் ஓமாலேயும் ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த ஆறு தசாப்த காலப்பகுதியில் இவ்வாறு பாதிக்கப்பட்ட 542 பேர் தற்போது அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஆஜ



ஓ-மலே

ராகவுள்ள சட்டத்தரணி ஒருவர் இத்தொகை வழங்கப்பட்டிருப்பது குறித்து தெரிவிக்கையில், நஷ்டஈடு வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால், இவ்வாறான பாதகச் செயல்களுக்கு இத்தொகை போதுமானதல்ல - என்றார்.

'இது ஓர் ஆரம்பம்; எனினும் எதிர்காலத்தில் இவ்வாறன செயல்கள் குறைக்கப்படும்' என்று ஓ-மலே கூறியுள்ளார்.

ஆயர் ஓ-மலேக்கு முன்னர் மேற்றாசனத்தின் தலைமைப் பதவியில் இருந்த ஆயரின் அசட்டையீனத்தாலேயே குருமார் இவ்வாறான சேஷ்டைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்[illegible]ளது.



ஈராக்கில் அமைதியை நிலைநாட்டவென நிக்கரகுவா நாடு 240 படையினரை அங்கு அனுப்பியுள்ளது. ஈராக் புறப்படமுன்னர் தனது குழந்தைக்கு முத்தமிட்டு விடைபெறும் நிக்கரகுவா வீராங்கனை.

# கெரில்லாக்களின் தாக்குதலில் 4 அமெரிக்க படையினர் காயம்

பக்தாத்,ஓக.10

ஈராக்கிய கெரில்லாக்களின் தாக்குதலில் நேற்று நான்கு அமெரிக்கப் படையினர் காயமடைந்தனர்.

வடபகுதி நகரான கிர்குக்கில் தேடுதல் நடத்திக் கொண்டிருந்த படையினரைக் குறி வைத்து நேற்றுக் காலை கிரேனட் வீச்சு நடந்ததாகவும் -

இத்தாக்குதலில் நான்கு வீரர்கள் காயமடைந்ததாகவும் தேடுதல் நடத்திய படையணிக்கு பொறுப்பான அதிகாரி தெரிவித்தார்.

பக்தாத்திலுள்ள ஜோர்தான் தூதரகத்தில் குண்டுவெடித்த பின்னர் நடந்த முதலாவது சம்பவம் இது என்று கூறிய அந்த அதிகாரி, இத்தகைய தாக்குதல்களை கட்டுப்படுத்த வேண்டுமாயின் கெரில்லாக்களை தேடும் பணியை தீவிரப்படுத்த வேண்டுமென்று கூறினார்.

தாக்குதலில் காயமடைந்த இருவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது என்று வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ)

# ஐ.நா. சபையின் உறுப்பு நாடாக தாய்வானை சேர்க்குமாறு மனு

தைபே,ஓக.10

தாய்வானை ஐ.நா.சபையின் உறுப்பு நாடாக சேர்த்துக் கொள்ள வேண்டுமெனக் கோரி 15 நாடுகள் மனுக்கொடுத்துள்ளன.

ஐ.நா.சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தாய்வான் உறுப்பு நாடாக இருநதது. ஆனால், ஐ.நா. சபையில் சீனா உறுப்பு நாடாக சேர்ந்ததும் தாய்வான் வெளியேற்றப்பட்டது.

தாய்வானை தனிநாடாக சீனா பார்க்கவில்லை. அதனை சீனாவில் இருந்து பிரிந்துபோன மாநிலமாகவே அது பார்க்கிறது. இதனால், ஐ.நா. சபையும் தாய்வானை தனது உறுப்பு நாடுகளில் ஒன்றாக சேர விடாமல் தடுத்து வருகிறது என்று கூறப்பட்டது.

27 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட தனிநாடு தாய்வான். எனவே, உறுப்பு நாட்டிற்கான அந்தஸ்து வழங்க வேண்டுமென 1993ஆம் ஆண்டு முதல் ஐ.நாவை தாய்வான் கோரிவருகிறது.

தற்போது காம்பியர், டொமினிக் குடியரசு, நிக்கரகுவா, சுவிட்ஸர்லாந்து உட்பட 15நாடுகள் தாய்வானுக்கு ஆதரவுக்கரம் நீட்டி அந்த நாட்டை ஐ.நாவில் சேர்த்துக் கொள்ளும் படி மனுக்கொடுத்துள்ளன. (எ)

## உலக அரங்கில்

### அமெரிக்கா எச்சரிக்கை

ஜகார்த்தா,ஓக.10

இந்தோனேசியாவில் மேலும் பல தாக்குதல்கள் நடக்கலாம் என்று அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.

தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள ஹோட்டல் ஒன்றின் முன்பாக கார்க் குண்டை வெடிக்க வைத்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை ஆராய்ந்த பின்னரே அமெரிக்கா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.


# பாலஸ்தீன அகதிமுகாம் மீது இஸ்ரேலியப் படை தாக்குதல்!

மேற்குக் கரையில் உள்ள பலஸ்தீன அகதிமுகாம் மீது நேற்று முன்தினம் இஸ்ரேலியப் படையினர் நடத்திய தாக்குதலில் மாடிக்கட்டடம் சேதமடைந்தது.

பலஸ்தீனப் போராளிகள் சிலரை கைதுசெய்யச் சென்ற இஸ்ரேலியப் படையினர் மீது அகதிமுகாமில் இருந்த சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தியதையடுத்தே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய அரசு கூறியுள்ளது.

ஆனால், டாங்கி எதிர்ப்புப் பீரங்கிகள் மூலம் இஸ்ரேலியப் படையினர் வேண்டுமென்றே இத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று ஹமாஸ் இயக்கம் கூறியுள்ளது.

நேற்றுமுன்தினம் தெற்கு லெபனானில் இஸ்ரேலிய விமானங்கள் ஹமாஸ் இயக்கத்தின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாக எழுந்த குற்றச் சாட்டையடுத்து, இந்தச் சம்பவம் நடந்துள்ளதற்கு பலஸ்தீனத் தரப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. (எ)



லைபீரியத் தலைநகர் மொன்றோவியாவுக்கு விஜயம் செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி ஒருவரை பாதுகாப்புடன் அழைத்துச் செல்லும் அரச படை வீரரைப் படத்தில் காணலாம்.

# கம்போடிய பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சி முன்னிலையில்

கம்போடியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் முதல் கட்ட வாக்கு எண்ணிக்கையில் பிரதமர் தற்போது பதவியில் இருக்கும், ஹுன் சென்னின மக்கள் கட்சி முன்னிலையில் உள்ளது என்று அந்நாட்டுத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

முதல் கட்ட வாக்கு எண்ணிக்கையின் முடிவுகளின்படி ஆளுங்கட்சி 76 சதவீதமும், பிரதான எதிர்க்கட்சி 40 சதவீதமும் என்ற நிலையில் உள்ளன.

123 உறுப்பினர்களைக் கொண்ட அந்நாட்டு நாடாளுமன்றத்துக்கு கடந்த ஜூலை27 ஆம் திகதி தேர்தல் நடந்தது. வரும் செப்ரம்பர் 6 ஆம் திகதியே தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளியிடப்படும் என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# காமவெறி பிடித்த யானை மூவரைத் தூக்கி பந்தாடியது

காம வெறி தலைக்கேறிய மதம் பிடித்த யானை வீதியால் சென்ற மூவரை பந்தாடிய சம்பவம் தாய்லாந்தில் நடைபெற்றுள்ளது.

செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்டு வந்த இந்த யானை, நீண்ட காலமாக பெண் யானையின் துணையின்றி தனியாக அடைக்கப்பட்டிருந்தது.

சம்பவ தினத்தன்று காம வெறி தலைக்கேறிய இந்த யானை கட்டப்பட்டிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு வீதிக்கு ஓடியது.

வீதியால் சென்ற மூவரை தூக்கி பந்தாடிய யானை அவர்களை காலால் மிதித்துக் கொன்றது.

வனத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து யானையைப் பிடித்துச் சென்றனர். (எ)


பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்து 25 வருடங்களுக்கு மேலாக, அனுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்.

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன், அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை, ஒரு வருட உத்தரவாதம்!

கெமரா பழுது பார்த்தல்



மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தல்



டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, லென்சஸ், ஸூம் கெமரா பிளேக்ஸ் சேர்கியுற், றீபிளேஸ்மன்ட்ஸ், ஸ்டூடியோ பிளாஷஸ், கொம்பியுடரைஸ்ட், ஃபிளாஷ் கன்ஸ்ஹை-பை எம்பிலிபையர்ஸ், சற்டலைட்ஸ்.

LD, CD, VCD, DVD கெசட்ஸ், CD இயந்திரங்களை VCD யாக மாற்றுதல்
செலுலர் தொலைபேசிகள், பெக்ஸ்மெசின்கள், கோட்லெஸ், அனலொக் தொலைபேசிகள், இலக்றோனிக் டைப்ரைட்டர்கள்,மைக்றோவேவ்ஸ் ஒவன், பொலிஷர், பிளென்டர், மின்சார விசிறிகள், சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மோட்டார்கள்.

GRAYON

DURST ELECTRONICS (PVT) LTD.

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 575480, 565756
P.G. மாட்டினுக்கு எதிரிலும். ரேனுகா ஹோட்டலுக்கு அருகிலும் (கடல் பக்கம்)

# மாகாண மட்டத்திலான இடமாற்றத்துக்கு விண்ணப்பம்

தென்மராட்சி, ஓக.10

வடக்கு - கிழக்கு மாகாண திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான 2004ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றல் விண்ணப்பங்கள் மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி, கூட்டுறவு, கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளன.

இடமாற்றல் விண்ணப்பங்கள் அந்தந்த நிறுவனத் தலைவர் ஊடாக எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)


## வீடு, தோட்டம் விற்பனைக்குண்டு

1. யாழ். வீதியில் 3பரப்புக் காணியுடன் நல்ல நிலையிலுள்ள வீடு விற்பனைக்குண்டு.
2. கச்சேரி நல்லூர் வீதியில் இரண்டு அடுக்குகளையும், நிலவறையும் கொண்ட 4000 சதுர அடி விஸ்தீரணமுள்ள மாடி வீடு 6 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. இந்த வீடு மூன்றாவது மாடி கட்டத்தக்க தள அமைப்புக் கொண்டது. இதைவிட தனியானதொரு கட்டடமும் உள்ளது.
3. பளையில் 30 ஏக்கர் தென்னந்தோட்டமும் ஓரளவு சேதமடைந்த வீடும் நல்ல கிணறும் கொண்ட தோட்டம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- சிவராஜா அல்லது மகா
151, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்.
T.P. 077-7116695.

(21132) (24-11-19)


## மாதாந்தக் கருத்தரங்கு

யாழ். பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையத்தின் மாதாந்த துறை சார் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் திருமதி பகீரதி கணேசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் 'முகாமைத்துவமும் நிர்வாகத்துறையும்' என்னும் விடயம் பற்றி தேசிய சேமிப்பு வங்கியின் திருநெல்வேலி கிளை முகாமையாளர் இ.இராஜமகேந்திரசிங்கம், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத் துறைத் தலைவர் திருமதி தேவரஞ்சனி சிவாஸ்கரன், தியான ஆசிரியை கௌரி ஆகியோர் கருத்துரை வழங்குவர்.(எ-10)

## ஆடிவேலை வரவேற்க வணிகருக்கு அழைப்பு!

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலயத்தின் ஆடிவேல் வீதியுலா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் யாழ். நகர வீதிகளூடாக இடம்பெறவுள்ளது.

இந்த வீதியுலா இடம்பெறும் வேளையில் நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களின் முன்பாக அலங்கரித்து கும்பங்கள் வைத்து பாலகதிர்காம முருகனை வரவேற்குமாறு யாழ். வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ-10)


## தேவை

பொருள்களை நன்கு பொதிசெய்யக்கூடிய, சைக்கிளில் சென்று (டிலிவரி) விநியோகஞ் செய்யக்கூடிய முன் அனுபவம் மிக்கவேலை ஆள் தேவை.
*கவர்ச்சியான சம்பளம* (மதிய உணவும் சேர்த்து) வழங்கப்படும்.
உடனே நேரில் வரவும்.

**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
(சி-29391) (26-24-15-18) ☎ 222 2567.



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்!
*கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட*

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(28666)



## நடமாடும் இலவச கண்பரிசோதனை முகாம்

### உங்கள் கண்களை நாங்கள் காப்போம்

- உங்கள் கண்களை இலவசமாக பரிசோதனை செய்வதற்கும்
- சகல வகையான மூக்குக்கண்ணாடிகளையும் விசேட கழிவு விலையில் பெற்றுக்கொள்வதற்கும்
- கண்பார்வைகுறைந்த பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

☞ இடம்: வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி
நேரம்: காலை 9.30 (புதிய நேரம்)
காலம்: இன்று (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை





துஷா மூக்குக் கண்ணாடி விற்பனையாளா
544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(26-21-19-11-24) T.P. 021 222 3461 (C/29405)




ஹரி ஓம் நாராயணாயநம



# அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் மஹோற்சவ விஞ்ஞாபனம்



★★★★★★

மெய்யன்பர்களே!

நிகழும் சுபானு வருஷம் ஆடி மாதம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை (11-08-2003) தொடக்கம் ஆவணி 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (22-08-2003) வரை மஹோற்சவம் நிகழும். அன்பர்கள் அனைவரும் எம்பெருமானைத் தரிசனை செய்து இஷ்டசித்திகள் பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 11–08–2003 | திங்கள் | மு.ப. 11.30 மணி |
| தேர் வீதிவலம் | 20–08–2003 | புதன் | மு.ப. 11.30 மணி |
| உறியடி உற்சவம் | 20–08–2003 | புதன் | மாலை 7.00 மணி |
| ஸ்ரீரங்கநாதர் பாதபூஜை | 21–08–2003 | வியாழன் | மு.ப. 8.30 மணி |
| தீர்த்த உற்சவம் | 21–08–2003 | வியாழன் | மு.ப. 10.30 மணி |
| ஆஞ்சநேயர், வைரவர் பொங்கல் | 22–08–2003 | வெள்ளி | மு.ப. 8.00 மணி |
| திருக்கல்யாணம் | 22–08–2003 | வெள்ளி | பி.ப. 2.30 மணி |

### விழாக்கால நேர ஒழுங்குகள்

| | | | |
|---|---|---|---|
| காலைப்பூஜை | காலை 7.00 மணி | கலை நிகழ்வுகள் | பி.ப. 3.30 மணி |
| அபிஷேகம் | மு.ப. 08.30 மணி | தம்பபூஜை | பி.ப. 5.00மணி |
| தம்பபூஜை | மு.ப. 10.30 மணி | வசந்தப்பூஜை | பி.ப. 5.45 மணி |
| பிரார்த்தனை | மு.ப. 11.15 மணி | விஷேட நிகழ்ச்சிகள் | மாலை 7.00 மணி |
| வசந்த பூஜை | மு.ப. 11.45 மணி | | |

பிரதம குரு: சிவஸ்ரீ பரம சண்முகசுந்தரக்குருக்கள்
உதவியாளர் (நிரந்தர பூசகர்கள்): சிவத்திரு.கு.ஞானசுதன், சிவத்திரு.தி.வரோதயன்
மங்களவாத்தியம்: பால.பாலமோகன் குழுவினர், அளவெட்டி.

- பொறுப்புரிமைப் பரிபாலனசபை.
நாகேஸ்வரம்,
அளவெட்டி.


*விளம்பர அன்பளிப்பு:*
**கல்யாணி கிறீம் ஹவுஸ்**
இல.73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


(21117) (19-11-24)

# மரண அறிவித்தல்கள்

## கலாசூரி
## இரத்தினதுரை சிவகுருநாதன்

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் 23, மூர் வீதி, வெள்ளவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கலாசூரி இரத்தினதுரை சிவகுருநாதன் (தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரும் பிரபல சட்டத்தரணியும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவரும்) அவர்கள் 09.08.2003 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கந்தர்மடம் காலஞ்சென்ற இரத்தினதுரை - செல்வபாக்கியம் தம்பதிகளின் அன்புமகனும் கோண்டாவில் காலஞ்சென்ற N.K. இராசசிங்கம் - மதியாபரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் தனரஞ்சிதமணி அவர்களின் அருமை கணவரும் மாலதி, கீதா, விஷ்ணுவர்த்தன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருக்கேதீஸ்வரன், மயூரன், சுஜிதா ஆகியோரின் அன்பு மாமானாரும், மதுமிதா, நிர்த்தனா, சேரமான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2003) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்., உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23, மூர்வீதி,*
*வெள்ளவத்தை.*
T.P. 01364795. (21173)

தகவல்: இ.குலசிங்கம் (மைத்துனர் - அதிபர், ஊரெழு கணேசாவித்தியாசாலை, கோண்டாவில் கிழக்கு.) (26-11-19-24)

## ராமையா ஐயர் சங்கரன்

(சாமிபக்தர், சமயசொற்பொழிவாளர்)

சென்னையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சவூதி அரேபியா,ஓமான் ஆகிய நாடுகளில் வாழ்ந்தவருமான ராமையா ஐயர் சங்கரன் அவர்கள் 08.08.2003 வெள்ளிக்கிழமை இல.48/3, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் சாயி பக்தரும் சமயசொற்பொழிவாளரும், யோகாம்பிகை (விமலா) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ராமையா ஐயர் தம்பதிகளின் (சென்னை) அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்துரை (யாழ்ப்பாணம்) தம்பதிகளின் அன்பு மருமகனுமம் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு 48/3; முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*48/3, முதலாம் ஒழுங்கை,*
*பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (21245) (26-11-19-24)

தகவல்:
S.K. பொன்னுத்துரை
T.P. 071 2243956

## சீவரட்ணம் கனகசிங்கம்

(ஓய்வுபெற்ற சிறுவர் நன்னடத்தை பாதுகாவலர் அதிகாரி)

குப்பிளான், காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரட்ணம் கனகசிங்கம் அவர்கள் 30.07.2003 புதன்கிழமை ஹொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சீவரட்ணம் தம்பதிகளின் மகனும கிருஸ்ணகுமாரியின் (கண்ணாக்கா - கல்வித் திணைக்களம், யாழ்.வலயம்) அன்புக் கணவரும் கஸ்தூரி (ஆசிரியை, ஊரெழு கணேச வித்தியாசாலை, பட்டப்படிப்புகள் கல்லூரி கலைப்பிரிவு மாணவி), முரளிதரன் (**Diploma in fisheries first batch**), வாசுகி ( விஞ்ஞானப்பிரிவு 2005 **A/L** மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலாதேவியின் (ஜேர்மன்) சகோதரரும் காலஞ்சென்ற முத்து கிருஸ்ணன் மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் மருமகனும் கந்தையா, கிருஸ்ணவேணி, கிருஸ்ணபவானி (சுவிஸ்), கிருஸ்ணதயாளினி (பிரான்ஸ்), கிருஸ்ணராதா (கொழும்பு) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2003) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 1மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'அன்னை இல்லம்'*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (21235) (24-11-19)

தகவல்:
மனைவி (கண்ணாக்கா),
பிள்ளைகள்.

Ammas funeral mass is on 11/08/03 at 800 in Navatkuli St. Antonies. You can contact 070213402 or 0712370443

## உதயன்

# போரா? சமாதானமா? நாடப்போவது எதை?

மக்களின் ஆணையைப் பரிகாசத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கடந்த புதன்கிழமை இரவு இலங்கையின் பத்திரிகை ஆசிரியர்களைத் தாம் சந்தித்துப் பேசியபோதே அவர் மக்களின் ஆணையைக் கேலிக்குள்ளாக்கும் விதத்தில் கருத்து வெளியிட்டார்.

'உதயனின்' சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி'யின் ஆசிரியர் தமிழர் சார்பாக சரமாரியாக எழுப்பிய கேள்விகளினால் எரிச்சலடைந்த ஜனாதிபதி, "தமிழீழம் தவிர வேறு எந்தத் தீர்வுக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரன் இணங்கமாட்டார். சமஷ்டித் தீர்வு ஒன்றுக்கு பிரபாகரன் இணங்குவாரேயானால் நான் என்னுடைய தலையை வெட்டுவித்து அதைப் பிரபாகரனுக்கு அனுப்பிவைப்பேன்" என்று வெகு சூடாக சூளுரைத்தார்.

நிரந்தரத் தீர்வுக்கான அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துப் பேச முன்னர், இடைக்கால நிர்வாகம் எதற்கு என்று சீறிய ஜனாதிபதி, தனி இராணுவம், தனிக் கடற்படை, தனி நீதிமன்றம், தனிப் பொலீஸ், தனி நிர்வாகமுறை என்று பேணுகின்ற புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால் அது தனிநாடு வழங்கியது போன்றதாகிவிடாதா எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு 'சுடர் ஒளி' ஆசிரியர் "நீங்களும் உங்கள் ஆட்சியின்போது இடைக்கால நிர்வாகம் வழங்க முன்வந்தீர்களே? பிரதமர் ரணில்கூட தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடைக்கால நிர்வாகம் ஒன்றைப் புலிகளுக்கு வழங்குவேன் என்று தெரிவித்து அதற்கு தேர்தல்மூலம் மக்கள் அனுமதி பெற்றுத்தானே இந்தக் கைங்கரியத்தைச் செய்ய முன்வந்துள்ளார்? அதை நீங்கள் தடுக்க முயல்வது மக்கள் ஆணையைப் புறக்கணிப்பதாகுமே?" - என்று கேள்வி எழுப்பினார்.

அப்போது ஜனாதிபதி தந்த பதிலே, அவர் மக்கள் ஆணைக்கு எவ்வளவு தூரம் மதிப்புக் கொடுக்கின்றார் என்பதை அளவிடப் போதுமானதாக இருந்தது.

புலிகளுடன் சமாதான முயற்சிகளை - அமைதிப் பேச்சுகளை - ஆரம்பிக்கவும் -

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் புலிகளிடம் ஒப்படைக்கவும் -

கடந்த பொதுத் தேர்தல் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி மக்களின் ஆணையைப் பெற்றிருந்தது என்பதும் அனைவருக்கும் வெள்ளிடைமலையாகத் தெரிந்த விடயம். அதையே இப்போது கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

"ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், ஏதோ ஓர் உள்பக்கத்தில், ஒரு மூலையில், ஒரு வரியில், தெளிவில்லாமல் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதை வைத்துக்கொண்டு இடைக்கால நிர்வாகத்துக்கு மக்கள் ஆதரவு தந்தார்கள் என்றோ - ஆணை வழங்கினார்கள் என்றோ - கொள்ளமுடியாது" - என்று புதுவியாக்கியானம் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி.

மேலும் "1994 பொதுத் தேர்தலின்போது புதிய அரசமைப்பைக் கொண்டுவருவேன் என்று மக்களுக்கு வாக்குறுதி அளித்து அதற்கு மக்களின் தெளிவான ஆணை அனுமதி - அங்கீகாரம் - பெற்றே நான் ஆட்சிக்கு வந்தேன். ஆனால், நான் புதிய அரசமைப்பைக் கொண்டு வந்தபோது அதை ஐ.தே.கட்சி எட்டி உதைத்ததன்மூலம், மக்களின் ஆணையைப் புறக்கணித்து, உதாசீனம் செய்தது. இப்போது மட்டும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எங்கோ ஒரு மூலையில் சேர்த்துக் கொண்ட ஒரு வரியைக் காட்டி மக்கள் தலையில் மிளகாய் அரைக்க முடியுமா? அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவதா?" - என்று காரமாகக் கேட்டார் ஜனாதிபதி.

மக்கள் ஆணைக்கு ஜனாதிபதி கொடுக்கும் மதிப்பைப் பார்த்து சிரிப்பதா, அழுவதா என்ற நிலைமை தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு.

"ஈழம் தவிர வேறு எந்தத் தீர்வுக்கும் தலைவர் பிரபாகரன் வரமாட்டார், வந்தால் எனது தலையை வெட்டி அவருக்கு அனுப்பிவைப்பேன்" என்று கூறும் அளவுக்கு ஜனாதிபதி குமாரதுங்க தனது முடிவில் உறுதியாக உள்ளார். வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகமும் வழங்கப்படக்கூடாது என்கிறார் அவர்.

அப்படியானால் அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கை என்று அவர் எதிர்பார்ப்பதுதான் என்ன? தாம் விரும்பும் - கூறும் - ஏற்பாடுகளுக்கு இணங்கிவராத புலிகளுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்து அவர்களை இராணுவ ரதயல ஒழததுககடட வேணடும என அவா எதாபாாககனறாரா?

அதை அவர் செய்து களைத்த பின்னர்தானே, 'மாற்றுவழியை நாடுங்கள்!' என்று ஆணை வழங்கி, புதிய அரசை ஆட்சியில் ஏற்றினார்கள் மக்கள்.

1983 கலவரத்தை அடுத்து - அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா - தமிழர்களைப் பார்த்து "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" - என்று மமதையோடு பிரகடனம் செய்தார்.

இன்று தென்பகுதித் தலைவர்களைப் பார்த்து தமிழர்களும் அதைத்தான் கேட்கிறார்கள் - ஆனால், ஜே.ஆரைப் போன்று மமதையோடு அல்ல. விடிவுக்கான முடிவுக்கு சரியான பாதையைத் தேர்ந்தெடுக்கும் நோக்கோடு கேட்கிறார்கள்.

"போரா? சமாதானமா? இரண்டுக்கும் நடுவில் நின்று இழுபடாமல் நாட்டுக்காக நீங்கள் நாடப்போவது எதனை என்பதை தெளிவுபடுத்துங்கள்!" - இதுவே தமிழர் தரப்பின் இன்றைய கேள்வி.

தென்பகுதி சிங்களத் தலைமை ஒன்றுகூடி முடிவெடுக்க வேண்டிய விவகாரம் இது. தங்களுக்குள் இறுதி முடிவெடுக்காமல் அவர்கள் இழுபறிப்பட்டால் போரே இரு இனங்களின் மீதும் திணிக்கப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

# விசேட சுற்றுவேலி அமைத்து காரைநகரில் பெரும்போகம்

காரைநகர்,ஓக.10

காரைநகரில் இவ்வாண்டு 24 ஆயிரம் பரப்பில் சுற்றுவேலி அமைத்து பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை காரைநகர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வது தொடர்பான கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ்மாவட்ட கமநல சேவை ஆணையாளர் எஸ்.சுந்தரேஸ்வரன், காரைநகர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

காரைநகரில் கடந்த காலங்களில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கட்டாக்காலி கால்நடைகளால் பெரும் பயிரழிவு ஏற்பட்டு வந்தது. இதனால் இம்முறை கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதில் இறுக்கமான நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென இந்தக் கூட்டத்தில் பலரும் வலியுறுத்தினர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

☆ சுற்று வேலிகளை செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அடைப்பதெனவும் இதற்காக விவசாயிகளிடமிருந்து பரப்பிற்கு 20 ரூபா வீதம் அறிவிடுதல்.

☆ விவசாய நிலப்பரப்பில் உள்ள குறுக்கு வேலிகளை அகற்றுதல்.

☆ விவசாய நிலத்தில் அத்துமீறி நுழையும் மாடுகளைப் பிடிப்பதற்கு 150 ரூபாவும், ஒரு நாள் பராமரிப்பு செலவாக 25 ரூபாவும் அறவிடுவது. அத்துடன், ஆடுகளைப் பிடிப்பதற்கு 75 ரூபாவும், பராமரிப்பதற்கு 15 ரூபாவும் அறவிடுவதாக தீர்மானிக்கப்பட்டது.

கமநலசேவை ஆணையாளர் எஸ்.சுந்தரேஸ்வரன் குறிப்பிடுகையில்:-

காரைநகர் பகுதி விவசாயிகள் கடந்த காலங்களில் விதை நெல் மற்றும் உரவகைகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இதனால், இம்முறை உரவகைகளை காரைநகரில் கொண்டுவந்து விநியோகிக்க தீர்மானித்துள்ளோம். அத்துடன், விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் பெரும்போக உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொண்டால் அவற்றைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-73)

# அஞ்சல் அலுவலக சிற்றூழியர் பதவிக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.10

அஞ்சல் அலுவலகங்கள், உப அஞ்சல் அலுவலகங்களிற்கு சிற்றூழியர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடபிராந்திய அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர்களை பதில் ஆள்களாக பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்களே தற்போது கோரப்பட்டுள்ளன என தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விண்ணப்பதாரி, விண்ணப்பிக்கும் அஞ்சல் அலுவலக பிராந்தியத்தில் இரண்டு வருடங்கள் வசித்திருக்க வேண்டும். 8ஆம் வகுப்பு சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அத்துடன் முந்திய சகல விண்ணப்பங்களும் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் -

சகல அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர் பதவி தொடர்பான விவரங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாகவும் - பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் ச. சிவராசசிங்கம் தெரிவித்தார். (எ-11-12)

# குடாநாட்டில் நிவாரணம் பெறும் பிறமாவட்டத்தவர் விவரம் திரட்டல்

வலி.வடக்கு,ஓக.10

வெளிமாவட்டங்களில் இருந்துவந்து யாழ். மாவட்டத்தில் நிவாரணம் பெறுபவர்களின் விவரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினால் திரட்டப்பட்டு வருகின்றன.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளின்போது வெளிமாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்து குடாநாட்டில் தங்கியிருப்பவர்கள் மற்றும் தொழில், கல்வி நடவடிக்கைகளுக்காக இங்கு வந்து நிவாரணம் பெறுபவர்களின் விவரங்களே இவ்வாறு திரட்டப்பட்டு வருகின்றன.

இவர்களுடைய எதிர்காலத் திட்டமிடல் மற்றும் இவர்களுக்கான கொடுப்பனவுகளைக் கணக்கிடுவதற்காகவே இந்த விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு கிராம சேவையாளர்களும் தத்தமது பிரிவில் தங்கியிருக்கும் இத்தகையோரின் விவரங்களைத் திரட்டி பிரதேச செயலகங்களுக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

குடாநாட்டில் நிவாரணம்பெறும் பிறமாவட்டத்தவர்களின் இந்த விவரங்களை பிரதேச செயலகங்கள் யாழ்.செயலக புனர்வாழ்வு பிரிவிடம் கையளிக்கவுள்ளன.

(எ-4-86)

# பாலகதிர்காமம் ஆலயம் வழங்கும் 'குகஸ்ரீ' விருது 'ஆர்ட்டிஸ்ற்' மணியத்துக்கு

யாழ்ப்பாணம்,ஓக10

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம் ஆண்டுதோறும் வழங்கும் குகஸ்ரீ விருது இம்முறை மூத்த ஓவியக் கலைஞர் பெ.சுப்பிரமணியத்துக்கு (ஆர்டிஸ்ற் மணியம்) வழங்கப்படுகிறது.

பாலகதிர்காம ஆலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ள பாராட்டு விழாவில் வைத்து இந்த விருது வழங்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் விஜயலஷ்மி சிவச்சந்திரன் தலைமையில் விழா நடைபெறும்.

நல்லூர் கிராம உத்தியோகத்தர் இ.சந்திரகுமார் வரவேற்புரை வழங்குவார். அறிமுக உரையை பிரம்மஸ்ரீ சௌ.சசிகுமார சர்மா வழங்குவார்.

பிரதம விருந்தினராக பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) கலந்துகொண்டு விழா நாயகருக்கு பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் அணிவித்து விருதை வழங்கிக் கௌரவிப்பார்.

கலைப்பீடாதிபதி ப.கோபால கிருஷ்ண ஐயர், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். (ஐ)

## நாளை

ஆடி 26
திங்கட்கிழமை
(11.08.2003)
திதி : சதுர்த்தசி
முற்பகல் 11.52 வரை
நட்சத்திரம்:உத்தராடம்
முற்பகல் 8.28 வரை
பூரணைவிரதம்
சுபநேரம்: 12.04 - 1.34
ராகுகாலம்: 7.34 - 9.04
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பண்படுத்தப்படாத நிலத்தினாலும் பண்படாத மனத்தினாலும் எந்தப் பயனும் கிடையாது.

# வட்டியில்லாக் கடனடிப்படையில் 'புளோரசென்ற்' மின்குமிழ்கள்

## மின்சார சபை விநியோகிக்கிறது

அச்சுவேலி,ஓக.10

இலங்கை மின்சார சபை மின்பாவனையாளர்களுக்கு வட்டியில்லாத கடன் அடிப்படையில் 'புளோரசென்ற்' மின் குமிழ்களை வழங்கி வருகிறது.

குறைந்த மின் செலவில் கூடிய வெளிச்சத்தைக் கொடுப்பதற்கு வசதியாக மின்சாரசபை 'புளோர சென்ற்' மின்குமிழ்களை விநியோகித்து வருகிறது.

சாதாரண மின் குமிழ்கள் போல் அல்லாமல் பயன்படுத்தும் மின்சார அளவைவிட 5 மடங்கு வெளிச்சம்தரும் மின் குமிழ்கள் இவை என்று கூறப்படுகிறது.

கடன் அடிப்படையில் மின் குமிழ்களைப் பெற்றுக்கொள்ளும் மின் பாவனையாளர்கள் தமது ஆள் அடையாள அட்டையையும் மின்குமிழ் பெற்றுக் கொள்ளும் மாதத்திற்கு முந்திய மாத மின்சாரக் கட்டணம் உட்பட முழு நிலுவையையும் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் அலுவலகத்தில் மின்குமிழ் பெறுவதற்கான ஒப்பந்தத்தை பூர்த்திசெய்து மின் குமிழ்களை மின்சார சபையின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் மின்குமிழ்களுக்கான கட்டணம் 12 தடவைகளில் சமமான தொகையாக மின்சாரக் கட்டணத்துடன் சேர்த்து செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-11)

# அரியாலையில் விரைவில் உரக்களஞ்சியம் நிறுவப்படும்

## கமநல சேவை அலுவலர் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.10

அரியாலைப் பகுதியில் பல்வேறு வசதிகளுடன் கூடிய உரக் களஞ்சியம் ஒன்றினை நிறுவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்த உரக் களஞ்சியச்சாலை விவசாய கால்நடை அபிவிருத்திக்கு வேண்டிய வசதிகளையும் உள்ளடக்கியதாக அமையும்.

உரக் களஞ்சியத்துடன் இணைத்து விவசாய போதனாசிரியர்கள், விவசாய உத்தியோகத்தர்கள் ஆகியோரின் அலுவலகங்களையும் இயக்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளும் செய்யப்படவுள்ளன.

மேற்படி உரக்களஞ்சியச்சாலையை அமைப்பதற்கு யாழ். அரசாங்க அதிபர் மற்றும் கமத்தொழில் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என கமத்தொழில் திணைக்கள அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (எ-86)

# பன்னிரு வேங்கைகளின் நினைவாக தீருவிலில் மீண்டும் நினைவுத்தூபி

## நிர்மாணிப்பு வேலைகள் விரைவில் ஆரம்பம்

கரவெட்டி,ஓக.10

வல்வெட்டித்துறை தீருவிலில் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவுத்தூபி மீண்டும் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்தப் பன்னிருவரும் கடந்த 1987 ஆம் ஆண்டு பாக்கு நீரிணையில் சென்றுகொண்டிருந்தவேளை இந்திய கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு ஸ்ரீலங்கா கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். பின்னர் காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவேளை சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்தனர்.

இவர்களது நினைவாக தீருவிலில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபிகள் மற்றும் உருவச்சிலைகள் கடந்த 1996 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா படையினரால் தகர்க்கப்பட்டிருந்தன.

தற்போது அதே இடத்தில் மீண்டும் புன்னிரு வேங்கைகளின் நினைவுத் தூபிகளும் உருவச் சிலைகளும் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

வல்வெட்டித்துறை மக்களின் ஒத்துழைப்புடன் வல்வை மக்கள் ஒன்றியம் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

உருவச்சிலைகள் மற்றும் நினைவுத் தூபிகளுக்கான சிற்ப வேலைப்பாடுகளை ஓய்வுபெற்ற சித்திரப் போதனாசிரியர் சிவசுப்பிரமணியம் (ரமணி) மேற்கொள்ளவுள்ளார். (எ-4-70)

# CALL FOR PROJECT ASSISTANTS

**RBIP (RURAL BANKING INNOVATION PROJECT) GTZ**

Applications are invited from Candidates who have recently graduated to conduct a field data collection survey in the Jaffna district. The applicants should possess B.A. (Hons.) in Economics or Sociology and should be familiar with Data Collection, task this for socio-economic study.

| Duration of Project: | Monthly Remuneration : |
|---|---|
| AUGUST TO DECEMBER 2003 | Rs. 15,000/= (ON SATISFACTORY WORK) |

Send or hand over your CVs with full details to JRP Office, GTZ, Jaffna on or before 15/08/2003. Selected candidates should be ready to start work by 20/08/2003.

*Please forward your applications to:*
Ms. Nicoleen Smainathar
Consultant - RBIP, GTZ - JRP
472, Main Street, Jaffna.

Further information regarding the type of work etc... could be obtained from:
DR. C. ELLANKUMARAN,
Senior Field Researcher, RBIP- GTZ

(21165)


## செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அழகியல், தொழில் நுட்பம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயற்றிட்ட செயலமர்வு எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலையிலிருந்து இப்பாடங்கள கற்பிக்கும் தலா இரண்டு ஆசிரியர்களை செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்

## சனசமூக நிலையம் புனரமைப்பு

தொல்புரம் செல்வா சனசமூக நிலையக் கட்டடம் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருக்கும் சங்க உறுப்பினர் ஒருவர் இதற்கான நிதியை வழங்கியிருந்தார் என்றும் -

புனரமைக்கப்பட்ட கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது என்றும் - சங்கத் தலைவர் ஞா.சிதம்பரநாதன் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)


**மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்**

கைதடி தெற்கு
**சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவு விழாவை**
முன்னிட்டு நடத்தப்படுகின்ற
**மாபெரும் சைக்கிள் ~ மரதன் ஓட்டப் போட்டிகள்**

மரதன் ஓட்டம் 25 மைல் - 11-08-2003
திங்கட்கிழமை காலை 6.30 மணி
சைக்கிள் ஓட்டம் 50 மைல் - 12-08-2003
செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணி
ஆரம்பிக்கும் இடம்: நிலைய முன்றிலில்
(கைதடிச் சந்தி)
☛ இப்போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் போட்டி தொடங்கும் நேரம் ஆரம்பிக்கும் இடத்துக்கு வரவும்.

(21236) (21-19)



**வேலையாள்கள் தேவை**

கோழிப்பண்ணையில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை
ஊக்கமாக வேலை செய்பவர்களுக்கு நல்ல சம்பளம் வழங்கப்படும்.
தங்கியிருத்தல் வேண்டும்.

தொடர்பு: **தனபாலசிங்கம்**
(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)
19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(21200) (21-19)



**கியூபிட் போட் KUPID FORT**
(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) **Capsules**



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியூபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியூபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியூபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

விசாரணைகள் யாழ்.நகரில்
தொலைபேசி 222- 3191


## 18ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 10 - 02 - 1956



விண்ணில் 10 - 08 - 1985

**த்ருமதி கமலாதேவி சுப்பிரமணியம்**
(ஆசிரியை றோ.க.பாடசாலை, கோப்பாய் தெற்கு)

ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுமாய்
பதினெட்டு ஆண்டுகள் உருண்டதம்மா
எங்களின் துயரம் ஆற்றிட வழியில்லை
இதயம் உருகிட அஞ்சலி செய்தோம்.

கிறிஸ்தவ கல்லூரி முன்பாக
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

பிரிவால் துயருறும்:
கணவர் - சுப்பிரமணியம்
மகன் - சுதர்ஸன்
(பல்கலைக்கழகம், மொறட்டுவ)

(21113) (21-19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி செல்வநாயகி நாரிப்பிள்ளை**

| உருவாய் | அருவாய் |
|---|---|
| 12 - 06 - 1928 | 11 - 07 - 2003 |

அன்பினால் எமையாண்டு ஆதரவு தந்து என்றும்
இன்பமாய் நாம் வாழ இனியன செய்து தந்தீர்
உம்பதம் போற்றுகின்றோம், உலகதன் நியதியேற்று
பொன்னடி சேர்ந்தீர் நம்மைப் புழுவெனத் துடிக்கவைத்து.

பழையபொலீஸ் நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு.


கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(21176)(12-15)

உ
அம்பாள் துணை

**மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் – துர்க்காபுரம்**

**ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் ஆலய**



**அலங்கார உற்சவம்**

அம்பாளின் உற்சவம் 03.08.2003 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

9ஆம் நாள் 11.08.2003 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்காதேவியின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மேல் ஏறி நின்று துர்க்காதேவியின் வீதியுலாவுடன் சேர்ந்து திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

☛ அடியார்களின் போக்குவரத்து வசதி கருதி இ.போ.ச.பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

*அடியார்கள் அனைவரும் அம்பாளைத் தரிசித்து உய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

பரிபாலனசபை.
துர்க்காபுரம் ப.ம.திட்டம்,
மிருசுவில்.

- சி.நவரத்தினம்
ஆலய தர்மகர்த்தா.

(213233) (32-21-19)

# ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கு பாலர் பாடசாலை

அதி நவீன கற்பித்தல் உபகரணங்களுடன்



கிழமை நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை

- **Play Group** (For Kids from 2+ to 3+ Years of age)
- **Montessori School** (For Kids from 3+ to 4+ Years of age)
- **Pre - School** (For Kids from 4+ to 5+ Years of age)

வடமராட்சியிலும், யாழ்நகரிலும் ஆவணி மாதம் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. மேலும் விஜயதசமி அன்று ஏடு துவக்கவிருக்கும் சிறார்களுக்கு எல்லா ஒழுங்குகளும் செய்யப்படும்.

**அனுமதியை இப்போதே பெறுங்கள்**

# இப்போது வடமராட்சியிலும்

வடமராட்சியில் மாபெரும்

## திறப்பு விழா

Chief Guest

**Mr.D.R.Arumainayagam**

Former Assistant Director of Education

திகதி 24-08-2003

நேரம் பி.ப. 4.00 மணி



- கற்பித்தல் மொழி முற்றுமுழுதாக ஆங்கிலத்தில்.
- பிரசித்தி பெற்ற AMI Montessori கற்பித்தல் முறை.
- குடாநாட்டு குழந்தைகளுக்கான விசேட சலுகையாக மாதம் 500/= மட்டுமே

## சிறுவர்களுக்கான ஆங்கில மொழி பாட நெறிகள்

5+ முதல் 14 வரை

- Level 4 **Upper Intermediate** 6 MONTHS
- Level 3 **Intermediate** 6 MONTHS
- Level 2 **Lower Intermediate** 6 MONTHS
- Level 1 **Foundation** 6 MONTHS

## வளர்ந்தோருக்கான ஆங்கில மொழி பாட நெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

- **Certificate in English** 6 MONTHS
- **Diploma in English** 6 MONTHS
- **Advanced Diploma in English** 6 MONTHS

# BRITISH BUSINESS SCHOOL

JAFFNA CITY CAMPUS: 140, Temple Road, Jaffna.

VADAMARATCHCHI CAMPUS: Point Pedro Road, Kiramakkottadi,Puloly

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 12 - 11 - 1947



ஆண்டவன் மடியில் 10 - 08 - 2002

### அமரர் இராமலிங்கம் சிற்சபேசன்

(முன்னாள் ஊழியர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்-தெல்லிப்பழை)

பாசத்தின் இருப்பிடமே! பண்பின் உறைவிடமே!
அப்பா நீங்கள் மண்ணுலகை விட்டு விண்ணுலகம்
சென்று ஆண்டொன்று ஆனாலும் இரு விழிகள்
சிந்திய நீர்த்துளிகள் இன்னும் காயவில்லை
மாண்டவர் மீண்டதில்லை என்று உணர்ந்த பின்பும்
ஏங்குகின்றோம் அப்பா மாறாது மாறாது உங்கள்
அன்பு முகம் என்றும் எங்களை விட்டு அகலாது.

393/47, கோவில் வீதி.
நல்லூர்.

மனைவி, மக்கள், மருமகன், பேரன்,
மாமன், மாமி, மைத்துனர், மைத்துனி.

(20201) (15-19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருந்திய அழைப்பும்



### திருமதி அமரசிங்கம் சிவபாக்கியம்

கடந்த 11-07-2003 வெள்ளிக்கிழமை அன்று இறையடி சேர்ந்த திருமதி அமரசிங்கம் சிவபாக்கியம் அவர்களின் வீட்டுக் கிருந்திய கிரியைகள் இன்று (10-08-2003) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தத்தம் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி. அமரசிங்கம் (கணவர்)
மக்கள்,மருமக்கள்.

தற்காலிக முகவரி-
புளியடி வைரவர் கோவிலடி.
லோட்டன் வீதி. மானிப்பாய்.

நிரந்தரமுகவரி:-
வீமன்காமம்.
தெல்லிப்பழை.

(21215) (15-11)

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்

வையத்துள் சங்கமம் 19 - 10 - 1935



தெய்வத்துள் சங்கமம் 08 - 08 - 1995

### அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா

திதி- 10.08.2003

பாசத்தின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
எம் தெய்வமே! நீங்கள் எங்களைவிட்டுப்பிரிந்து
எட்டு ஆண்டுகள் அல்ல எத்தனையோ ஆண்டுகள்
தான் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு என்றும் மாறாதையா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

சந்தையடி:
மானிப்பாய்.

அன்பு மனைவி, மைத்துனர்கள்.
சகோதரிகள், மைத்துனிகள். மக்கள்,
மருமக்கள, பேரப்பிள்ளைகள்.

(C/29390) (11-15)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

கைதடி.ஓக.10

கைதடி வடக்கு, நவபுரம் முன்பள்ளி நிலையத்தின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.மன்மதராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கலந்துகொள்ளவுள்ளார்.(எ-75)

## கணிப்பீட்டுத் திட்டம் குறித்து கையேடு

வலிகாமம்தெற்கு,ஓக.10

ஆண்டு 10 தொடக்கம் ஆண்டு 13 வரைக்குமான பாடசாலை அடிப்படையிலான கணிப்பீட்டு வேலைத்திட்டம் தொடர்பாக 2003ஆம் ஆண்டுக்குரிய புதிய வடிவமைப்பு முறைக்கேற்ப தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் கையேடு கல்வி அமைச்சினால் வலயக் கல்விப பணிப்பாளர்களூடாக கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய வடிவமைப்பு முறைகளுக கமைய அதிபர்கள், ஆசிரியர்கள் உரிய முறையில் கணிப்பீட்டு பதிவேடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் -

மாணவர்களின் இறுதிப் பெறுபேற்றுத் தயாரிப்புகளுக்கு இவை உதவியாக அமையும் எனவும் - வலியுறுத்தப்பட்டுள்ளது.

உள்ளக மேற்பார்வைக்கும் இப்பதிவுகள் இலகுவாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் இது தொடர்பான படிவங்கள் பாடசாலைகளுக்கு கிடைக்கும் எனவும், கணிப்பீட்டு செயற்பாடுகள், பதிவுகள பற்றிய கருத்தரங்குகளும் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் கூறப்பட்டது. (எ-152)

## மனிதமேம்பாட்டு கருத்தரங்குகள்

வலிகாமம்தெற்கு, ஓக.10

மனிதமேம்பாட்டு கல்விக் கருத்தரங்குகளை மாதத்தில் இரண்டு தடவைகள் உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய கோட்டங்களில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உடுவில் கல்விக கோட்டப் பாடசாலைகளில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்துவரை கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான மனித மேம்பாட்டுக் கல்விக் கருத்தரங்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேராசிரியர் சிவஞானசுந்தரம் கருத்துரை வழங்கினார்.

சத்தியசாயிபாபா கல்விமேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் அன்பு, தர்மம், அகிம்சை, சாந்தி, சமாதானம போன்றவற்றை மாணவர்களுக்கு அறிவுறுத்தி மனித நேயத்தை வளர்க்க எல்லோரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என பேராசிரியர் தமது கருத்துரையின் போது வலியுறுத்திக கூறினார். (எ-152)

## உச்சியோடை கிளைமூலம் நிவாரணம் விநியோகிக்க அனுமதி கிடைத்தது

மானிப்பாயில் உள்ள உச்சியோடைப் பகுதியில் செயற்பட்டு வரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை மூலம் அப்பகுதி மக்களுக்கான உலர்உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உச்சியோடை கிராமசேவையாளர் பிரிவில் 2001ஆம் ஆண்டில் இருந்து மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 39ஆவது கிளை இயங்கி வருகின்றபோதிலும், இப்பகுதி மக்களுக்கான உலர் உணவு நிவாரணப்பொருள்கள் மானிப்பாய் பிரதான வீதியில் உள்ள கிளை ஒன்றின் மூலமே இதுவரை வழங்கப்பட்டு வந்தன.

மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகாரசபையினர் இக்கிராம மக்கள் உலர்உணவுப் பொருள்களைப் பெறுவதில் அனுபவித்து வரும் கஷ்டங்களை விளக்கி மேற்படி கிளைமூலம் அவற்றை வழங்குமாறும் அப்பகுதி கிராம சேவையாளர் ஊடாக வலி.தென்மேற்கு பிரதேச செயலரிடம் கோரி இருந்தனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்று அப்பகுதி மக்களுக்குரிய நிவாரணப் பொருள்களை 39ஆவது கிளை மூலம் வழங்குவதற்கு பிரதேச செயலகம் அனுமதி வழங்கி உள்ளதாகக் கூறப்பட்டது. (எ-152)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 01 1936



மறைவு 21 07 1994

### அமரர் தம்பு துரைராஜா

திதி: சதுர்த்தசி (10.08.2003)

எங்கள் துணை நீங்கள் என்றிருக்க தினம்
எமைத் தவிக்கவிட்டு ஒரு நொடியில்
எமைவிட்டுப் பிரிந்தீர்களோ ஐயா?

சங்கானைகிழக்கு,
பண்டத்தரிப்பு,
பிரான்பற்று.

உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்தித்து நிற்கும்:
அன்புமனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(21170) (12-15)


## வேதாகமக் கண்காட்சி

இலங்கை வேதாகமச் சங்கம் யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்துடன் இணைந்த வேதாகமச்சரித்திரப் பொருட்காட்சி ஒன்றை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12ஆம் ,13ஆம், 14ஆம் திகதிகளில் மு.ப. 10 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணிவரை நடத்தவுள்ளது. இப்பொருட்காட்சிகளுக்கான ஆரம்ப வைபவம் 12ஆம் திகதி மு.ப 10 மணிக்கு நடைபெறும்.

இந்தியாவிலிருந்து வருகை தரும் Dr. அருள்மணி வேதாகமச் சரித்திரத்தை இலகுவான முறையில் தெளிவுபடுத்தவுள்ளார்.

(21178)(11-15)

வாருங்கள் இறைவனின் உண்மையை அறியுங்கள்
ஆதிமுதல் இறைவன் மனிதனோடு உரையாடியதை கண்டுகளியுங்கள்.
வேதாகம அறிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இலங்கை வேதாகமச் சங்கம்


## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

### அமரர் கலாநிதி கந்தையா நடேசலிங்கம்

திதி: பூர்வபக்க ஏகாதசி

தாயின் மடியில் 26-03-1943

இறைவன் நிழலில் 10-08-2001



(முன்னாள் கணிதவியல் விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழகம், சிரேஷட பொறியியல் விரிவுரையாளர் மொறட்டுவ பல்கலைக்கழகம், சிரேஷட பொறியியல் விரிவுரையாளர் பல்தொழில் நுட்பக்கல்லூரி, வேல்ஸ் பல்கலைக் கழகம், Research Director; Comprol Systems Research Ltd; Computer Based system Consultants; Cardiff.U.K.)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
ஒளி தந்து, எமையெல்லாம் வாழ வைத்த
உம் நினைவு என்றும் எம்நெஞ்சில் நிறைந்திருக்கும்.

"அன்னை இல்லம்"
ஞானவைரவர் கோயில் வீதி.
உரும்பிராய் கிழக்கு.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(21206) (15-11)


## மேசைவரிப்பந்தாட்ட (TABLE TENNIS)

### திறந்த சுற்றுப்போட்டி -2003

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையானது PC House (PVT) Ltd. நிறுவனத்தின் ஆதரவுடன் ஆண், பெண், இருபாலாருக்குமான ஒற்றையர், இரட்டையர் கலப்பு இரட்டையர் ஆட்டங்களை இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் வீர, வீராங்கனைகள் விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் உடற்கல்வி அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 29-08-2003



விளையாட்டு அவை யாழ்.பல்கலைக்கழகம்.

விளம்பர அனுசரணை:- கணனி மற்றும் கணனி உதிரிப்பாக விற்பனை நிறுவனமான

PC HOUSE (PVT) LTD.
NO.1K,STANLEY ROAD, JAFFNA.

PC House Innovative Solutions !

(21218) (15-11)

# கவிதைக் கணங்கள்

## இறப்பு

முந்தி வரும் அல்லவெனில்
பிந்தி வரும் ஆனால்
நிச்சயம் வரும் அதுவே
நிரந்தரமானதும்
இவ்வுலகின் முடிவுரையாம்
அவ்வுலகிற்கிது முகவுரையாம்
நித்திரை கூட–இதன்
ஒத்திகையாம்–அதுதான்
மரணம்.

ஜே.எம்.ரீ.றொட்றிக்



## சுவரொட்டி ஆக்கிரமிப்பு



போராடும் எம்மண்ணில்
காணுமிடமெல்லாம்
சுவரொட்டிகள்.
வீதி மதிற்சுவரெங்கும்
நாள்தோறும் விதம்விதமாய்
வர்ணங்களில் விளம்பரங்கள்
நானாவித பானங்கள்
அழகு சாதனப்பொருள்கள்
காதல் ரசம் சொட்டும்
சினிமாக்கண்றாவிகள்
காதோர "டயலோக்"கின்
கட் அவுட்டுகள்
போதாக்குறைக்கு
இன்னிசை கானங்கள்
தேசத்து மறவர்களை
நேசித்த மண்ணில்
திரும்பும் இடமெல்லாம்
இன்று இவைதான்,
கரும்புலிகள் மீதும்,
மாவீரர் மீதும்
எங்கிருந்தோவந்தோர்
சுவரொட்டி ஒட்டுவதும்
ஆக்கிரமிப்புத்தானே?
இந்த ஆக்கிரமிப்பை
அகற்றுவது எப்போது?

கா.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

## இயற்கை வாழ்விக்கும்!



குண்டுகள் தந்த புகையதுவும்
உண்டு விட்ட உயிர்களதும்–கண்டு
பூமி களைத்த தெடா
புண்பட்டுப் போனது நெஞ்சமெடா:

தறிக்கப்பட்ட மரங்களாலும்
பறிக்கப்பட்ட வளங்களாலும்–குறியின்றி
சூழல் திகைக்குதெடா
சுருண்டே மனிதமும் வீழுதெடா!

இரசாயனங்கள் தான் கொண்டு
அரசாளும் விவசாயிகளால்–சிரசே
சிதைந்து போனதெடா
சீரின்றி நிலங்கள் வரண்டதெடா!

பொலித்தீன் பாவனை அதிகரித்து
நலத்தீமை பலவும் முளைத்திங்கு–அலுத்தே
போனது நிலமுமெடா
போக்கிட வழிதனைக் கண்டிடடா!

இயற்கை தனைநீ வாழ்வித்தால்
இயற்கையும் உன்னை வாழ்விக்கும்–செயற்கை
தனை நீ தவிர்த்திடடா
தழைகளால் பசளை இட்டிடடா!

வீட்டுக்கொரு மரம் வளர்த்து
நாட்டுக்கு நன்மை செய்திட்டால்–கூட்டு
குவலயமது சிறக்குமெடா
குதூகலங்கள் வந்து நிறையுமெடா!



-சூரியநிலா
ஈச்சமோட்டை

## முடிவு

குழப்பி விடுவாங்கள்....!
கர்ஜனையும் உறுமலும் அடங்கி
அர்ச்சனையொன்று நடந்த போது
அம்மா சொன்னா இப்படி
அம்மாவின் ஆலோசகர்
ஐயாவும் இதையே சொன்னார்.
கள்ளமாய் எங்களைத் திருடிய
வெள்ளை வேட்டி அண்ணனும்
இதைத்தான் சொன்னான்.
குதப்பி.... குதப்பி....
தாங்களே இப்போது
குழப்பிக் கொண்டனர்!

நீதி கேட்ட போது மதுரை எரிந்தது
'சொன்னதைச் செய்' என்ற போது
உப்பும் தாளும் தடவியது போல்
உள்ளவர் எல்லோரும்
துள்ளிக்குதிக்கின்றனர்.
நோர்வேயும் பறந்து பார்க்கிறது
யப்பானும் வந்து பார்க்கிறது
அமெரிக்காவும் மிரட்டிப் பார்க்கிறது
பக்கத்துக்காரனும்
அமர்த்தப் பார்க்கிறான்
ஆனால்,
நீரிலே விம்பம் தெரியவே இல்லை
இப்போதும்
குழம்பித்தான் கிடக்கிறது....!
அப்பத்தை பங்கிடச்சொல்லி
குரங்கிடமா போவது?
ஆறு சுற்றிலே கண்டதெல்லாம்
ஆறிய் கஞ்சியாய்க கிடக்க
ஏழாவது சுற்றுக்கு
இப்போதென்ன அவசியம்!
பனையளவு இருக்கிறது
இன்னும் ~ நீ
செய்து முடிப்பதற்கு.

குடியிருப்பைக் கேட்ட போது
மடியிலேயே கையை வைக்கிறீர்கள்
ஆயுதக் களைவென்று!
அமைதிப் படையை
நம்பிக் கெட்டதை
தம்பி கெதியாக மறக்கமாட்டான்.
ஹோட்டல்களை தந்து விட்டு
கோட்டையை நீ எடுக்க நாங்கள்
செய்ததொன்றும் வர்த்தக ஒப்பந்தமல்ல....!
ஒப்பந்தக் கடதாசிக்கு உயிரூட்டி
ஆட விட்டிருக்கின்றோம்
என்று சொல்லி
நிமிர்ந்து
நீ நின்ற போதுதான்
அந்தக் கடதாசி
குப்பை மேட்டிலே கிடப்பதை
உலகுக்குக் காட்டினோம்.
குப்பைக்கு நெருப்பு வைத்து
அந்தக் காகிதத்தை
அரியணையில் ஏற்றலாம்.
அல்லது
காகிதத்தை எரித்து விட்டு
குப்பையிலேயே நீயுறங்கலாம்.
உனது கரத் தீக்குச்சி
முடிவொன்று சொல்லும் வரை
குழம்பிய தண்ணீர்
தெளியவே மாட்டாது....!

-ஆதிரை

## கண்ணம்மா காத்திருக்கிறாள்!

இன்னிசை கானமாய்
குயிலினங்கள் இசைபாட......
கதிரவனும் மெதுவாக
பொற்கதிரைப் பரப்பிடவே......
கண்ணம்மா கண்விழித்தாள்
கனவுகளின் நடுவினிலே!
பெண்பார்க்க வருவார்கள்......
பெருமையுடன் நினைந்தவள்
துணுக்குற்று நின்றாள்......
கணக்குத்தான் தெரியவில்லை
பெண்பார்த்தோர் பட்டியலில்!
உங்களால் இயன்றதை
பங்களித்தால் சரியென்று......
இருபது பவுண்தனை
இம் எனுமுன் கேட்டிடுவர்!
ஒன்றுமே வேண்டாமென்று......
ஒரு மோட்டார் சைக்கிளதை
மருமகள் சென்றுவர......
மறுக்காமல் தா என்பர்!
வருபவள் வெறுங்கையாய்
வருவதா என்னவென்று......
கேள்வியுடன் கேட்பர்
இலட்சமாய் தரும்படி!
பெற்றவர்கள் சரியென்று
கடிதத்தில் சொல்லுவதாய்......
அனுப்பிவிட்டு சம்பந்தத்தை
கலங்கி நிற்கும் கண்ணம்மாவும்
கலந்தே கதிகலங்கி
வீற்றிருப்பர் வீட்டினிலே!
அடுத்து வந்த வரனுக்காய்
பெற்றோரும் பேச்செடுக்க......
வரவிருக்கும் வசந்தத்திற்காய்....
வாசலோரம் காத்திருந்தாள்!!



-அ.நிதர்சன்
உசன்



காலம் காலமாக
இளம் சருமம் பெற
கிரீம், லோஷன்
உபயோகியுங்கள், இல்லையேல்
மெடிமிக்ஸில் குளியுங்கள்.

காலங்காலமாய் சருமத்தை
இளமையாக, பொலிவாக,
ஆரோக்கியமாக
வைத்திருப்பதற்கான இரகசியம்
ஆயுர்வேதத்திலுள்ளது.
இதே ஃபார்முலா மெடிமிக்ஸ்
ஆயுர்வேதிக் சோப்பில் உள்ளது.
இது 18 சக்திவாய்ந்த மூலிகைகள்
மற்றும் தேங்காய் எண்ணெயின்
நற்குணங்கள் நிறைந்த,
கைகளால் தயாரிக்கப்பட்ட
ஒப்பற்ற கலவையாகும்.
மெடிமிக்ஸில் குளியுங்கள்,
உங்கள் சருமம், முகப்பரு, மாசு,
வெயில், சோர்வு
போன்றவையை எதிர்க்கும்,
அதோடு காலம் காலமாய் நீடித்த
பொலிவைத் தரும்.



மெடிமிக்ஸ் ஆயுர்வேதிக் சோப்
சருமத்தை இளமையாக
வைத்திருக்கும் என்றென்றும்

www.cholayil.com
CHOLAYIL



## நல்லூர்க் கந்தன் உற்சவகால

புத்தக
மலிவு விற்பனை

இந்தியாவில் இருந்து விஷேடமாக இறக்குமதி செய்யப்பட்ட சமய இலக்கியங்கள், சிறுவர் கதைகள், ரமணிச் சந்திரன் கதைகள், இலக்கிய நூல்கள், கம்பியூட்டர் நூல்கள், தமிழ், ஆங்கில, சிங்கள அகராதிகள் மற்றும் பாடசாலைப் புத்தகங்கள் 10% கழிவுடன் வழங்கப்படும்.

**திருவிழாச் சிறப்பு விற்பனை**

**நல்லூர் சிவாலயம் முன்பாக**

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-222 2573.

(24-11-15) (சி-29301)



## மனோதத்துவ வைத்தியம்

**(GENERAL PSYCHO THERAPY)**

யாழ்ப்பாணத்தில் 12.08.2003 - 17.08.2003 வரை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரை குறைவு இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.

உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம்.

தொடர்புகொள்ளவும்:

பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
**Govt.Regd.No.9492**
**Hot Line: 0777 569205**
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-29388) (24-11-15)


*நெஞ்சைவிட்டு அகலாத*

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



எழுதுமட் வாழைச் சேர்ந்த உயர்குடித் தோன்றல்

## அமரர் உ மிர்த லிங்கம் துரைசிங்கம்

மண் மகிழ 17-02-1913

கண் நெகிழ 21-07-2002

திதி: திரயோதசி - 10.08.2003

"கூவி அழைத்திடவே குதூகலித்து ஓடிவிட்டீர்!"
அன்புக்குமுண்டோ அடைக்குந் தாழ்!

அந்த நாள் எங்கள் ஊர் எழுது மட்டுவாழ் ஆனதே
இந்த நாள் அந்தப் பேர் பழுது பட்டுபாழ் போனதே
சொந்த ஊர் ஞாபகம் நெஞ்சை நெருடியே அசைபோடுதே
அந்த நினைவுகள் உம்பெயர் வருடியே இசைபாடுதே
வாழ்ந்தாய் வாழ்ந்து காட்டினாய் வளம்பல கொண்டு
வாழ்ந்து பார்க்கவே எமை ஊக்கிய உமக்கு உளப் பலம் உண்டு
முழுவாழ்க்கைக்கு நீ எழுதிய முன்னுரை எளிமை
எழும் உயர்வுக்கு நீ தந்த உபதேசம் பணிவு
தொழும் உழைப்புக்கு நீ தந்த உருவம் உறுதி
உள மகிழ்ச்சிக்கு நீ தந்த மருந்து திருப்தி
புவியதனில் உன் வளத்தக்காள் வாழ்க்கைத் துணையிருக்க
அவையத்து முந்தியிருக்க வைத்த அன்பு மக்கள் அகமிருக்க
சொந்தமும் சுற்றமும் மகிழ்ந்து சுகம் கூற
பந்தமும் பாசமும் பணிந்து புகழ்பாட
ஐயா அண்ணே அப்பா ஆசைக் கிழவா
மெய்யா இவை உன் பெயரா? உயிரா? அன்புத் துரையா
அந்த மாதிரி வாழ்ந்து பார்த்தவன் நீ ஐயா!
எந்த மாதிரி வாழ்ந்து பார்த்தவன் நீ அண்ணே?
அந்த மாதிரி வாழ வேண்டுமென்றவன் நீ அப்பா!
ஊருக்கென்ன செய்தாய் யாரும் வன்மத்திலும் சொல்லவில்லை
ஊர் எனக்கென்ன செய்தது நீரும் உன்மத்தம் கொள்ளவில்லை
பேருக்குச் சொல்லவில்லை பெருமைக்குக் கூறவில்லை
கோயில், குளம், பள்ளி, விளையாட்டு ஊர்த்தொண்டு
வாயில் மெல்லாது உழைப்பால் வளப்படுத்தி வாழ்ந்தாயே!
மாட்டுச் சவாரி "அப்பா" அதில் மாவீரன் நீ ஐயா
ஓட்டப்போட்டி ஓட ஒருவரில்லை உன்னோடு மெய்யா
பெரிய கேணிப்பிள்ளையார் உன்பெயர் சொல்லி நிலைத்திருக்கும்
அரிய கல்வி தரும் பள்ளிகள் உன் புகழ் பாடி பூத்திருக்கும்
கோயில் குழந்தையென கொண்டாய் ஒரு பேரனை
தேனைப் பாலைத் தெவிட்டாத தீரனை
ஊனை உயிரை உருக்கிவளர்த்தாய் ஒப்பரிய. சூரனை
நோய் என்று காணமுன்னம் வாய்விட்டுக் கூறமுன்னம்
போய்விட்ட பொன்னை பொக்கிஷமாய் பொதிந்தாயே
வாய்விட்டு அழுதாயே வழிதெரியாது தொழுதாயே
பாய்விட்டு நோய் தொட்டு பல பட்டாயே
கதறினாய் பதறினாய் கடவுளே கதி என உதறினாய்
பெருமான் தந்த உயிர் பேரனாய் வந்த குயில்
கூவி அழைத்திடவே குதூகலித்து ஓடிவிட்டீர்
ஆவி அழியாது ஐயா வளர்த்த உயிர் அதனுடனே சேர்ந்துவிட்டீர்
அன்புக்குமுண்டோ அடைக்கும்தாழ் என்றே அவனுடனே அணைந்துவிட்டீர்
வாழ்வுக்கு? "இலக்கணம் கண்டு வாழ்ந்த ஐயனே"!
சாவுக்கு? "இலக்கியமாகிவிட்டாயே"..... தெய்வமே!
வாழ்த்துகிறோம் வணங்குகிறோம் வள்ளல் அடி வழி நடந்திடவே
போற்றுகிறோம் பொங்குகிறோம் பெரிய கேணியான் பொன்னடிகள் சேர்ந்திடவே.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

*"லிங்க நேய"*
*எழுதுமட்டுவாழ்.*

தற்காலிக முகவரி:
மருதடி, பருத்தித்துறை.

.- **குடும்பத்தினர்.**

(21212) (24)

# தேவையற்ற பணவிரயத்தை ஏற்படுத்தும்

# சில்லறைத் தட்டுப்பாடு....!

எங்கேயும் நாணயததைக் காண வில்லை என்று சலித்துக் கொண்டார் ஓர் ஓய்வுபெற்ற அரச ஊழியர். ஆமாம்! நாணயம் என்பது இன்று தட்டுப்பாடான விடயந்தான். ஆனால், அரச ஊழியர் சலித்துக்கொண்ட இடம் சந்தை. எனவே நாணயம் என்ற அர்த்த பரிமாணம் கொண்ட சொல்லில், அவர் குறிப்பிட்டது உலோகப் பணத்தையே.

நாணயம் என்ற சொல் பணத்தைக் குறித்தாலும், சாதாரண மக்கள் சில்லறைக்காசு, குற்றிக்காசு, நாணயம் என்று குறிப்பிடுவது உலோக நாணயங்களையே! கடந்த சில ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் இத்தகைய உலோக நாணயங்களுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது.



இந்தத் தட்டுப்பாடு 1995 மகா இடப்பெயர்வின் பின்தான் மெல்ல மெல்ல விஸ்பரூபம் எடுத்தது.

ஆனால், இப்போது தரைவழிப் பயணம் ஆரம்பிக்கப்பட்டு நீண்ட நாளகள் கடந்துவிட்டன. எனினும், சில்லறைக் காசுத் தட்டுப்பாடோ பெரும் பிரச்சினையாக இன்னும் தொடர்கிறது.

இன்றும் இருக்கின்ற முதியவர்களைக் கேட்டால் இன்று வழக்கற்றுப் போய்விட்ட சில்லறைகளில் அவர்கள் வாங்கிய பொருள்களின் பட்டியலை விரிப்பார்கள்.

அஞ்சு சதம் காசு அப்பு தருவார். அதிலை ரண்டு சதத்துக்குத் திருப்தியா ஐயற்றை கடையிலே தோசையோ, புட்டோ சாப்பிடலாம். ரண்டு சதத்துக்கு ஒரு கொத்து அரிசி வாங்கலாம் - என்று சொல்வார் ஒருவர்.

அஞ்சு சதம் கொண்டு போனால் உமல் நிறைய மீன் வாங்கி வரலாம். பதினைஞ்சு இருபது சதத்துக்குநல்ல வேட்டி சால்வை வாங்கலாம். என்று சொல்வார் இன்னொருவர்.

அடுத்த சந்ததியென்றால் ஐம்பது சதம் வரையான செலவுகளாக மேற்சொன்னவற்றைக் குறிப்பிடுவார்.

இன்றைக்கு 30 வருடங்களுக்கு முன்னர் முடிச்சுக் கயிறு (இழைக் கயிறு) 5 சத முடிச்சு, 10 சத முடிச்சு என்று தான் வழங்கப்பட்டது. அது போலவே சிமெந்துத் தாளிலான பைகளும் ஐந்துசதப்பை பத்துச் சதப்பை என்றே வழங்கப்பட்டது.

இனிப்புகள் ஐந்து, பத்துச் சதமாகவும், ரொபிகள் 25 சதமாகவும் ஐஸ்கிறீம் ஐம்பது சதமாகவும் இருந்தன.

ஆனால், அந்தக் காலம் இலகுவாக, விரைவாக மலையேறிப்போய் விட்டது. 1977 ஆம் ஆண்டின் திறந்த பொருளாதாரக் கொள்கையும், யுத்தமும் நமது பணப் பெறுமதியைச் சீர்குலைத்து, மானபங்கப்படுத்தி, நிர்வாணநிலைக்குக் கொண்டு வந்து விட்டன.

அதனோடு தொடர்புபட்டதாகவே உலோக நாணயத் தட்டுப்பாட்டையும் கொள்ளவேண்டும். ஏனெனில், தமது நாணயங்களின் பெறுமதிக் குறைவு பொருள்களின் விலைகளை உயர்த்தியதுடன் மட்டுமல்லாது நாணயங்களைக் கைவிட வைக்கும் செயறபாட்டிற்கும் ஊக்கம் அளித்தது எனலாம்.

ஆனால், இது இலங்கை முழுவதற்குமான பொதுவான பிரச்சினை அல்ல. குறிப்பாக யாழ். குடாநாட்டிற்குள்தான் சில்லறைப் பிரச்சினை முதன்மை பிரச்சினையாக உள்ளது. 10 ரூபா கொடுத்து ஒரு உதயனையோ வேறு நாளேட்டையோ வாங்க எண்ணினால் மீதிக்காசு தொடர்பில் பிரச்சினை எழுந்துவிடும். ஒன்றில் சில்லறை தருமாறு பத்திரிகை முகவர் கோருவார். அல்லது ரொபியோ, பென்சிலோ, அழிறப்பரோ வாங்கிக் கொண்டு போக வேண்டும். பல சரக்குக்கடைகள் ஓரளவுக்கு தாள் மட்டத்திற்கு விலைப் பெறுமதிகளை நகர்த்திவிடும். இல்லையேல் தீப்பெட்டி, கற்பூரம், பிளேட், சம்பூ, ரொபி எனச் சில்லறைப் பண்டங்களைத் தலையில் கட்டி விடும்.

சிகை அலங்கரிப்பு நிலையங்கள், வெண்மை வாணிபங்கள் யாவுமே இப்போது தாள காசுக் கொடுக்கல் வாங்கல்களுடனேயே தொடர்புபடுகின்றன. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சில்லறைகளைக் கவனத்திற்கு எடுப்பதேயில்லை. ஒரு லீற்றர் பெற்றோல் நிரப்ப வேண்டுமானால் 62.50 இற்கு ஒரு லீற்றர் வழங்க அவர்கள் முனைவதில்லை. 70 ரூபாவுக்கு அடிக்கின்றேன் என்ற ஒரே வசனத்தில் செயலில் இறங்கி விடுவார்கள். துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் விற்கும் கடைக்குப் போனீர்கள் என்றால் அங்கு சில்லறைக்குப் பதிலாக வால்ரியூப் ஆணிகள் காத்திருக்கின்றன.

சந்தையில் மரக்கறிகள் தாள்களுக்கு மட்டுப்படுத்திய நிறைகளுடனேயே காத்திருக்கின்றன. சில்லறை தருகிறேன் என்று யாராவது கூறினால சில வியாபாரிகள் அதை ஏற்பதற்கும் பின்னடிக்கின்றார்கள்.

தொலைத் தொடர்பு நிலையங்களே சில்லறைகளுக்காக பெரிதும் அல்லாடுகின்றன. ஏனெனில், இன்றைய சவால் மிகுந்த வாடிக்கையாளரை இழுத்து வைத்திருக்க வேண்டிய தேவைகொண்ட வியாபார நிலையங்களாக அவையே உள்ளன.

மேற்சொன்னவை யாவுமே நாம் ஒவ்வொருவரும் முகம் கொண்ட அனுபவங்கள்.

பணம் தொடர்பாக கற்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குக் காண்பிப்பதற்கு அரைச்சதம், ஒரு சதம், இரண்டு சதம், ஐந்து சதம், பத்துச் சதம், 25 சதம் ஆகியவற்றைத் தேடுவது பெரும்பாடாகிவிட்டது. அவை அரும் பொருள்களாகிவிட்டன. ஐம்பது சதமும் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றது.

நம்மிடம் 'உண்டியல்' கலாசாரம் ஒன்று இருந்தது. அதிலொன்று உண்டியலில் தினமும் சில்லறைகளை நிரப்பிச் சேமித்தல். மண்ணால் ஆன உண்டியல் பெட்டி (சல்லிமுட்டி) நிறைந்ததும் அதை உடைத்துத் தாளாக்கி, தமது தேவைகளுக்குப் பயன்படுத்துவர். இன்னொன்று கடவுளுக்காக வீட்டில் உண்டியலில் இட்டுச்சேமித்தல். உண்டியல் நிறைந்ததும் அதனைக் கோவில் உண்டியலில் இடுவர். அல்லது கோவிலுக்குத் தேவையான பொருள்களை வாங்கி அளிப்பர்.

இவற்றுக்கு அப்பால் கோவில் உண்டியல்கள் சில்லறைகளைத் தாங்கியதாகவே இருந்தன; இருக்கின்றன. உண்டியல் வருமானத்தில் கோவில் கட்டுமானம் நடைபெறும். கோவில் - கைதடிப்பிள்ளையார் - நம் கண் முன்னால் உள்ளது. கோவில் சில்லறைகளைக் கடைகளுக்குத் தள்ளுவதே பெருங்கஷ்டமான ஒரு காலமும் இருந்தது.

ஆனால், இன்று சில்லறைப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாகக் கோயில்களும் இல்லை. சில்லறைகளை எதிர்பார்க்கும் அர்ச்சனைகளும் இல்லை. சில்லறைகளை எதிர்கொள்ளும் நிலையில் உண்டியல்களும் இல்லையா? பணச்சுற்றோட்டத்தில் இருந்த சில்லறை நாணயங்கள் எவ்வாறு காணாமற்போயின?

**எஸ்.ஸ்ரீகுமரன்**

கொழும்பில் 5 ஆயிரம் ரூபா கொண்ட பைகளில் சில்லறைகளை வாங்கலாம் என்று வர்த்தகப் பிரமுகர் ஒருவர் கூறினார். அவ்வாறானால் சில பைகளை எடுத்து வந்து வங்கிகளோ, மொத்த வியாபார நிறுவனங்களோ சுற்றோட்டத்துக்கு விட்டு, சில்லறைத் தட்டுப்பாட்டை நீக்கலாமல்லவா?

இந்தத் தட்டுப்பாடு தேவையற்ற பணவிரயத்தை ஏற்படுத்துகிறது. பொருத்தமற்ற பொருளகளைத் தலையில் கட்டிக்கொண்டு வர நிர்ப்பந்திக்கிறது. இதனை நீக்க வேண்டியது மக்கள் நலனில் அக்கறை கொண்டோரது பொறுப்பல்லவா! ✷

---

# குப்பிழான் ஐ.சண்முகனின் 'அறிமுகங்கள், விமர்சனங்கள், குறிப்புகள்' புனைகதை சாரா இலக்கிய வரவு

புனைகதைசாராத இலக்கியப் பதிவுகளின் வருகை வெகுவாகக் குறைந்துள்ள நிலையில் குப்பிழான் ஐ.சண்முகனின் அறிமுகங்கள், விமர்சனங்கள், குறிப்புகள் பத்தி எழுத்துக்களின் திரட்டு நூல் விசேட கவனிப்பிற்குரியதாகின்றது.

கையடக்கமான அளவில் வெளி வந்திருக்கும் இந் நூலின் அட்டைப் படமானது 'தொடர்ந்து வரும் சுவடுகள் காலக்கனிவில் எடுக்கும் உன்னதக் கலைப் பெறுமானப் படிவத்தை பிரதிபலிக்கின்றது. அனுபவப்பதிவுகள் கலைநேர்த்தியோடு நிமிர்ந்து இறங்கும்போது எங்களுக்கோ ஒருவானவில்லைப் பார்க்கும் அதேயளவு பரவசம் ஏற்படவே செய்யும்.

ஒருதேடல் மிகுந்த வாசகன், நூலாசிரியர் ஓர் அரியமாகவிருந்து நிறப்பிரிகை செய்திருப்பதை இந்நூலை வாசிக்கும் போது உணருவான். உண்மையில் இன்றைய காலகட்டத்தில் நூலுருப்பெறும் அனுபவப்பதிவுகள் பொதுவாக பதிவாளர் அல்லது நூலாசிரியர் தன்னை அடிக்கடி விறைப்புடன் நிமிர்த்திக் கொள்ளும் தன்மையையும் ஒருபொம்மலாட்டத்தில் பதிவாளர் அல்லது எழுத்தாளர் பிரதான பொம்மையாக விளங்கிப் பதிவுகளை செய்திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (ஆனால் இந் நூலில் அத்தன்மைகளைக் காண முடியவில்லை. ஒவ்வொரு பதிவும் நடுநிலையாக இடம்பெற்றிருப்பது குறிப்பிடக்கூடிய முக்கிய அம்சமாகும். சொற்களை வெறுமனே அடுக்கி இந்தப் பதிகள் ஒழுங்கமைக்கப்படவில்லை என்பதால் கலைத்துவம் மிக நேர்த்தியாய வந்திறங்கிறது.

கலைத்துவம் அல்லது கலைப் பெறுமானங்களை மூன்று வகையான பெறுமானங்களைக் கொண்டிருக்கும். அதாவது பூச்சியப் பெறுமானம் எதிர்க்கணியப் பெறுமானம், நேர்க் கணியப் பெறுமானம் எனும் மூன்று வகையான பெறுமானங்கள் ஒரு கலைப் பெறுமானம் என்பதனுள் அடங்கியிருக்கலாம். எந்தவொரு கலை இலக்கியப் பதிவும் தனித்துவமான கலைப்பெறுமானத்தைக் கொண்டிருந்தால் வாசகர்களுக்கு (தேடல் மிகுந்த) பரவசத்தை ஏற்படுத்தவே செய்வும். அ.யேசுராசாவின் தூவானம் இதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும் தூவானத்தை போன்றே இன்னொரு வீதமான பரவசத்தை வாசகர்களுக்கு இந்நூல் ஏற்படுத்தும் -

'உள்ளது உள்ளபடியே.....' எனும் உள்நோக்கோடு இப்பதிவுகளைத் தந்திருக்கும் நூலாசிரியரின் இயல்பாக இருக்கும் தன்மையை ஒவ்வொரு பதிவிலும் காணலாம். அவரே அதை 'இவை எல்லாம் எனது மனதின் குரல்கள் வேண்டுமென்றே நான் எதுவும் எழுதவில்லை. எவரையும் எதையும் அவதூறு செய்ய நினைக்கவில்லை. மற்றவர்களின் மனமுக விலாசங்களை மறைக்க நினைக்கவில்லை. தேவையற்ற விதத்தில் மற்றவர்களின் மனம் புண்படுவதை நான் விரும்புவதேயில்லை. நல்லவையென்று நம்புகின்றவற்றைக்கண்டு சந்தோசப்படுகின்ற

## நூல்விரிசை

அல்லவை என்றுநான் உணர்ந்தவற்றைக்கண்டு விசாரப்படுகின்ற என் மன உணர்வுகளை உள்ளது உள்ளபடியே வெளிப்படுத்தியிருக்கிறேன்' எனக் குறித்துரைப்பதிலிருந்து இயல்பாக இருத்தலின் ஒரு வெட்டு முகத்தை காணமுடிகிறது. இந்நூலின் உள்ளடக்கத்தில் "இனவெறிப் போரின் வக்கிரங்களுக்கு பலியான மனிதாபிமானி நெல்லை க.பேரன் குடும்பத்தினர் உட்பட ஆயிரக்கணக்கானோர் நினைவாக----" இடம்பெற்றிருக்கும் சமர்ப்பணம் முக்கியமானது. மேலும் அறிமுகங்கள் என்ற தலைப்பில் பதினேழு எழுத்தாளர்களைப் பற்றிய அறிமுகங்களும், விமர்சனங்கள் என்ற தலைப்பில் ஒன்பது எழுத்தாளர்களின் படைப்புக்கள் பற்றிய விமர்சனங்களும் திரைப்படம், நாடகம், ஓவியம் என்பவற்றில் ஆறு திரைப்படங்கள், மூன்று கவிதை - நாடகங்கள், இரண்டு ஓவியக் கண்காட்சிகள் பற்றிய விமர்சனங்களும், குறிப்புக்கள் என்ற தலைப்பில் "அலை"- சிற்றிதழில் அதன் ஆசிரியர் குழுவில் முக்கியமான - ஒருவராக நூலாசிரியர் இருந்தபோது செய்திருந்த பதிவுகளும், அகாலத்தில் மறைந்த இருவரைப்பற்றிய நினைவுகளின் குறிப்புக்களும் இடம்பெற்றிருக்கக் காணலாம்.

**- இராகவன் -**

இவ்வுள்ளடக்கமானது கலைப் பெறுமானத்தில் பூச்சியமாகவோ, எதிர்க்கணியமாகவோ அமைந்து வெறும் ஆவணப்படுத்தலாக சரிந்து விடாமல் தனித்துவமான நேர்க்கணியக் கலைப்பெறுமானத்தை அடைந்து முனைப்புடன் நிமிர்கின்றது. முன்னுரையாகச் சில சொற்கள் தரும் இப் பதிவாளரின் இளைய நண்பர்களில் ஒருவரான - எஸ்ரஞ்சகுமார். ".... 'அறிமுகங்கள், விமர்சனங்கள், குறிப்புக்கள் என்ற இந்நூலுக்கு முன்னுரை எழுதப்புகுவது பாற்கடலுக்குள் ஒரு பாற் குடத்தைச் சொரிவது போன்ற அர்த்தம் குலைந்த ஒரு செயலாகவும் அமையலாம். எனினும் பாற்கடலில் இருந்து ஒரு குடம் பாலை அள்ளுவது சாத்தியமான ஒன்றே. பாற்கடல் என்ற மிகப்பிரசித்திபெற்ற சிறுகதையை அறியாதோர் - அனுபவிக்காதோர் மிகச் சிலரே. பாற்கடலை எழுதிய லா.ச.ராமாமிருதம் மற்றும் கு.ப.ராஜகோபாலன், தி.ஜானகிராமன் போன்ற படைப்பாளிகள் இயங்கிய அதே தளத்தில் இயங்குபவரே குப்பிழான் ஐ.சண்முகம். அவர்களும் அவ்வாறே, குப்பிழான் ஐ.சண்முகனின் படைப்புக்களில் லா.ச.ரா., கு.ப.ரா., தி. ஜானகிராமன் ஆகியோரின் படைப்புக்களில் நாம் காணும் மென்மை கம்பீரம், மோகனமான தமிழ்நடை, பீறிடும் அன்பு, நாசுக்கான கேலி போன்றவற்றைக் கண்டு நிறைவும் மகிழ்வும் எய்தலாம்" என 'உள்ளது உள்ளபடியே' எடுத்தியம்புகிறார். இதை வாசகன் தனது வாசிப்பனுபவத்தினூடாக உணர்வான்.

இந்நூலின் வாசிப்பனுபவ விளைவுகளை நோக்கினால் அறிமுகமில்லாத புதியதோர் உலகை அறிமுகம் செய்கிறது. பேராசிரியர் க.கைலாசபதியின் இன்னொரு முகத்தை நாசுக்காக வரைந்து காட்டுகிறது. பதிவுகள் இடம பெற்ற காலத்தில் வெளித்தெரிந்து




இப்போது மறக்கப்பட்டுவிட்ட மு.வே. யோகேஸ்வரன், லோகேந்திரலிங்கம போன்றோரைப் பற்றிய வெளிதெரி நுனிக்குறிப்புக்களைத் தருகிறது. செங்கை யாழியானின் "வாடைக்காற்று" சிற்பியின் "உனக்காகக் கண்ணே" முதலாய நாவல்களின் விமர்சனங்களின் ஊடே நடுநிலையான எழுத்துருவை அறிமுகம் செய்கிறது. சித்தார்த்த கடலிலிருந்து வீடு (Home From The Sea) நகரத்தில் இரு மனிதர்கள் (Two Men In The City) அஞ்சற் காசுக்கட்டளை (The Postal Money Order) ஆகிய திரைப்படங்களின் விமர்சனங்களின் மூலம் நல்ல சினிமாவின் அனுபவங்களை தொற்ற வைக்கிறது.

முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய இன்னுமொன்று 1970களின் முற்கூறுகளில் இலங்கை வானொலியில் பேராசிரியர் க.கைலாசபதியினால் நடத்தப்பட்ட 'கலைக்கோலம்' நிகழ்ச்சியை ஆவணமாக்கியிருப்பதுதான் - வானொலியில் ஒலிபரப்பாகும் எந்த நிகழ்ச்சியும் வானலையில் கலந்து மறைந்து விடும் தன்மையைக் கொண்டிருப்பதால் கலைக்கோல நிகழ்ச்சிகளைப் பற்றிய எழுத்துருவிலான பதிவு இங்கே முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

மேலும் கல்விசார் நோக்கில் இந் நூல் க.பொ.த(உயர்தரம்) கலைப்பிரிவில் கல்விபயிலும் மாணவர்கள் விமர்சனரீதியான அறிமுகத்தையும், விரிவான ஆழமான பார்வையையும் தரக கூடிய வழிகாட்டியாகவும் அமைந்துள ளது. இதைப் பயன்படுத்தும் மாணவர்கள் வாய்ப்பாட்டு ரீதியான விமர்சனக் கோட்பாடுகளிலிருந்து விடுபடுவர் என்றும் நம்பலாம்.

கலைநேர்த்தியும், சமூகநோக்கும் புதுமைப்புனைவுகளும் செறிந்த இந் நூலில் போர் வெறியின் வக்கிரங்களும், மெல்லிய இழையாக பின்னப்பட்டிருப்பது, குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக எழுத்தாளர் இரா. நடராசனின் 'ஆயிஷா' குறுநாவலை நினைவுபடுத்தும் "துளிர்க்கத்துடித்த இதயம்....." எனும் நெல்லை க.பேரனின் நினைவுக் குறிப்பிலிருந்து சில கவிதை வரிகள்.

"எம் இனிய நண்பனே!
நீ பிரிந்து சென்றுவிட்டாய்
உன் பிரிய மனைவியுடன்
மகனுடனும் மகளுடனும்
நீ பிரிந்து சென்றுவிட்டாய்"
உன் பிரிவு எம்மை நிலைகுலையச் செய்ததுதான்
உன் மத்தம் கொண்டு கதறியழ வைத்ததுதான்
ஆற்றொணாதுயரில் மூழ்கடிக்கச்செய்ததுதான்

இறுதியாக இந்நூலின் உள்ளடக்க வகைப்படுத்தலில் கவனம்செலுத்தாமல் விட்டிருப்பது ஒரு குறைபாடு தான் அத்துடன் எழுத்துப்பிழைகள் சொற்பமாக இருந்தாலும் அதையும் தவிர்த்திருக்கலாம். இது தவிர வேறு கவனிப்பிற்குரிய குறைபாடுகள் எதையும் கொண்டிராத இந்நூல் முக்கியமான புனைகதைசாரா இலக்கிய வரவாகும். ✩

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மல்லாகம் சந்தியில் இருந்து சுமார் 200யார் தூரத்தில் காங்கேசன் துறை வீதி அருகில் சகல வசதி களுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சேச் லேன், மாதா கோயில் அருகில், மல்லாகம்.(சி-29364)

முச்சக்கரவண்டி (ஓட்டோ) பட்டர் கலர் பஜாஜ் HH-XXXX தொடரிலக்கமுடையதும், தற்போது பாவனையில் உள்ளதுமான CANON 1215 போட்டோ பிரதி இயந்திரமும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6079254 (21210)

சாவகச்சேரி -மட்டுவில் - நுணாவில சந்தியில் கடை, மில் போடக்கூடிய மூன்று பரப்புக்காணியும், தோட்டக்காணி படைப்புவளவு வீடு கட்டும் காணியும் சக்கிடுத்தார் வளவுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.சிவகுமாரன், 34, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.(20669)

சொந்தப் பாவனையிலுள்ள ரவுண AC Toyota வான் 51 - சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: தொலைபேசி இல. 0777-734339. (21232)

வட்டவாள் ஜேர்மன் - 42" பாட்டுவாள் 72" X 61/2' என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: நா.நவரத்தினம், K.K.S வீதி, 4ஆம் மைல் இணுவில். (21219)

பவர் செலூலர் மேசைத் தொலைபேசி விற்பனைக்குண்டு, தொடர்பு: K.நடராசா, இல.3, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, T.P.No 071 2756499, 077 6146412. (21246)

கலர் மீன், தொட்டிக்குரிய அழகு சாதனப் பொருள்கள், மோட்டர்கள், Love Birds கூடுகள், புதிய வடிவமைபிலான மீன்தொட்டிகள், பூச்சாடிகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 55A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (21252)

## கார் விற்பனைக்கு

குளிரூட்டப்பட்ட டக்சன் சனி கார் விற்பனைக்குண்டு. தொடர்பு ந.சூரிய குமார், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். (21211)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கனகரட்ணம் வீதி, நாயன்மார்க்கட்டு குளத்துக்கு அருகில் உள்ள 23 பரப்பு நெற்காணியும் அதில் உள்ள கட்டிமுடிக்கப்படாத கட்டடமும் (களஞ்சியத்துக்கு / கைத தொழில் செய்வதற்கு உகந்தது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.கணேசன் 286, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயிலடி), யாழ்ப்பாணம். (21731)

இல.31/23 சபாபதி வீதி, வண்ணாா பண்ணை கிழக்கு யாழ்ப்பாணத்தில் 4 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு மேலே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (21240)

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, கச்சேரி கிழக்கு வீதியில் 11/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு 077-118693. (சி-29407)

சாவகச்சேரி நகரமையத்தின் கண்டி வீதியில் 21/2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு தொடர்பு: தவேலாயுதம், சட்டத்தரணி, சாவகச்சேரி (திங்கட்கிழமை, வியாழக கிழமைகளில் சந்திக்கலாம்). (21192)

## நாய்கள் விற்பனைக்கு

Doberman Pincher பெண் நாய்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21199)

## ENGLISH & SINHALA CLASSES

அடிப்படையில் இருந்து கிரமமான முறையில் வடிவமைக்கப்பட்ட பாட நெறிகள் மூலம் கற்பிக்கப்படும் (5ஆம தரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள், அரச/தனியார் நிறுவன ஊழியர்கள், பாடசாலை விலகியவர்கள் மற்றும் மொழி ஆர்வமுடையவர்கள் உட்பட) எவ்வயதினரும் தனியாகவோ சிறு குழுக்களாகவோ இணைந்து கொள்ளலாம். தொடர்பு T.Sagathevan, B.A. Lon, இல.46, பிரப்பங்குளம் லேன், வணணார்பண்ணை. (21167)

## வீடு விற்பனைக்கு

யாழ்.கலாசாலை வீதி, திருநெல்வேலியில் 2 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 581361, 0722118447. (சி-29314)

193/3, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் 2 பரப்புக் காணியில் 8 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு. மேற்காணும் முகவரியுடன் நேரில் தொடர்பு கொள்ளவும் T.P. 0777 727794, 021 222 2171 (21175)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg - 160/-. மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 1) மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். 2)பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய். 3) மீன் சந்தை முன்பாக சுன்னாகம். (21120)

## கோழிக்குஞ்சு விநியோகம்.

Prima, Broiler குஞ்சுகள் விலை 45/-, சிவப்பு சேவல் குஞ்சுகள் விலை 15/-, 18.08.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். 18.08.2003 பேட்டுக் குஞ்சுக்கு பதிவுசெய்தவர்கள் உடனடியாக எங்களைச் சந்திக்கவும். தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21198)

## தேவை

நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை. திருநெல்வேலி, கந்தர்மடம், நல்லூர், பிறவுண் வீதி, கொக்குவில் விரும்பத்தக்கது. தொடர்பு: 230, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (21169)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 77ஆம் ஆண்டு பிறந்த, மகம் நட்சத்திரம், 7 செவ்வாய் 68 பாவமுள்ள பெண்ணுக்கு 70 பாவத்திற்கும் குறையாத வெளிநாட்டு பிரஜாவுரிமை அல்லது நிரந்தர உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1982 மே/பா உதயன். (21242)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த திருவோண நட்சத்திரம், கிரகபாவம் 55 உடைய, 27 வயது தனியார் தொழில்துறை நடத்தும் மணமகனுக்கு அழகிய நிறமுடைய மணமகள் தேவை. பொருத்தமுள்ளவர்கள் ஜாதகக் குறிப்புகளுடன் தொடர்புகொள்க விளம்பர இல. 1981 மே/பா உதயன் (21234)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு இரண்டாந்தாரமாக மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. மணப்பெண் 30-40 வயதுக்குள் இருக்க வேண்டும். தொடர்பு: விளம்பர இல. 1980, C/o உதயன். (21227)

## வியாழமாற்றம் எப்படி

வியாழமாற்றம்எங்கும் விற்பனையாகின்றது. 15/- கணிப்பாசிரியர் 'சத்யா', ஆனைக்கோட்டை, 021-222 2753. கடவுள், மனிதன், உலகம் (ஆத்ம தத்துவஞான விளக்கங்களும் அடங்கின) எழுதியவர் டாக்டர் சின்னப்பு. யாழ் பஸ்நிலைய புத்தகசாலைகளிலும பெற்றுக்கொள்ளலாம். (21238)

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு அண்மையில் மேல் மாடிக்கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: 17, கோவில் வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 6315 (21216)

இலுப்பையடிச் சந்தியில் இருந்து 100யார் தூரத்தில், பலாலி வீதியில் இரு கடைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0712 245966 (21239)

## ENGLISH & SINHALA CLASSES

அடிப்படையில் இருந்து கிரமமான முறையில் வடிவமைக்கப்பட்ட பாட நெறிகள் மூலம் கற்பிக்கப்படும் (5ஆம தரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள், அரச/தனியார் நிறுவன ஊழியர்கள், பாடசாலை விலகியவர்கள் மற்றும் மொழி ஆர்வமுடையவர்கள் உட்பட) எவ்வயதினரும் தனியாகவோ சிறு குழுக்களாகவோ இணைந்து கொள்ளலாம். தொடர்பு T.Sagathevan, B.A. Lon, இல.46, பிரப்பங்குளம் லேன், வணணார்பண்ணை. (21167)

## வதிவிடப் பயிற்சி

அச்சுவேலி,ஓக.10

ஜீ.சி.ஈ. உயர்தர செயல்திட்ட இணைப்பாளர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

தேசியகல்வி நிறுவனம், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைகளம் ஆகியவற்றுடன் இணைந்து கொழும்பு பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கை நிலையம் நடத்தும் வதிவிடப் பயிற்சி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் 14ஆம் திகதி வியாழக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறும என யாழ்.கல்வி வலய கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-11)

## பெண் தலையில் படுகாயம்

தென்மராட்சி,ஓக.10

வேகமாகச் சென்ற மோட்டார் சைகிள், வீதிப்பள்ளத்தில் வீழ்ந்தபோது மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த பெண்தூக்கி வீசப்பட்டு தலையில் காயமடைந்தார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கெற்பேலியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த கனகலிங்கம் சசிகலா (வயது-25) என்பவரே தலையில் காயமடைந்தவராவார். சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவர் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (117)

## தாச்சிப்போட்டி

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி ஆதரவில் யாழ்.மாவட்ட தாச்சிச சங்கம் நடத்தும் தாச்சிச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 4.30 மணிக்கு மானிப்பாய், கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா 'யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் எஸ்.மாதுளன், வர்த்தக வங்கியின் முகாமையாளர் க.ரவீந்திரா உட்படப பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணியும் கட்டுடை விநாயகர் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. (எ-10)

We Serve

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படும்

### மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

காலம்: இன்று (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.00 மணி (புதிய நேரம்)
இடம்: கந்தரோடை சவாரித்திடல்

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

லயன் கே.திருநாவுக்கரசு
தலைவர்,
சுன்னாகம் லயன்ஸ் கழகம்.

விளம்பர அன்பளிப்பு:

அசோகா நகை அகம்
இல.111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P. - 222-6290

(21257) (26-21-15-19)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். Y.M.C.A. யின் முன்னாள் பொருளாளரும் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினரும் ஆகிய

### D.M. சோமசுந்தரம்


அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Y.M.C.A. நிர்வாகசபை
உறுப்பினர்,
அங்கத்தவர்கள், ஊழியர்கள்.

(c/29409) (26-11-18)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
1938 - 05 - 25



மறைவு
2003 - 06 - 28

அமரர்

### இராசையா சந்திரராஜா

குடும்பத்தில் மூத்தவரே குலவிளக்கே!
இருபத்து ஆண்டுகள் உங்கள்
குரல்கூடக் கேட்கவில்லை
வருவீர் வருவீர் என்று நாம்
வாஞ்சையுடன் பார்த்திருந்தோம்
வந்ததோ உங்கள் மரணச் செய்தி
காலமெல்லாம் உங்கள் நினைவோடு
வாழுவோம் அண்ணா

*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

சகோதரி திருமதி கமலாசலம்,
மனைவி திருமதி சந்திரராஜா,
பிள்ளைகள் (கனடா)

*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

(21253) (26-21-11-18)

## 31ம் நாள் நினைவு



தோற்றம்
28
03
1931

மறைவு
12
07
2003

தெல்லிப்பளை
### திரு. சரவணமுத்து ஸ்ரீ சோமஸ்கந்தர்

(ஓய்வுபெற்ற P.W.D. Overseer)

தெல்லி ஸ்ரீ சோமஸ்கந்தர் சிவனடியை
எய்தினர் எனவறிந்து ஏங்கி இரங்கி
மலர்வளையம் மலர்க்கொத்து
வைத்து மனமுருகி மறுகி மனமழிந்தீர்
மாற்ற மளித்திட்டீர், மனநிறைய உழைத்திட்டீர்
நன்றி.
அவர் முப்பத்தொன்று ஆகஸ்ட் பதினொன்றில்
2003 போயா தினத்திங்கள் முற்பகல் பத்திற்கு
பம்பலப்பிட்டி தொடர்மாடி நிலையத்தில்
சபிண்டியைத் தொடர்ந்து மதிய உணவுமாம்
இனிதேற்வீர் இறைநிலைத்தாய் இறைஞ்சிடுவீர்
மனநிறைய உழைத்தவும்மை அன்பாய் அழைக்கின்றோம்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
"ஸ்ரீ கந்தன் வளவு" ஆனைக்குட்டி ஒழுங்கு, தெல்லிப்பளை

DR. SRI KATHIKAICUMARAN SARAVANAMUTHU
"Sri Sai Illam"
127/108, Sri Dharmarama Road, Colombo 09.
T.P. 691530, 0777 639554

Talent Media

# மானமுள்ள இலங்கையர் அந்த வெள்ளைக்காரனின் நாட்டுக்கு விரல்களை வெட்டிவிட்டுச் செல்லவேண்டும் என்கிறது ஜே.வி.பி.

விஸா வழங்குவதற்கு விரல் அடையாளத்தைக் கேட்கும் அந்த வெள்ளைக்காரரின் நாட்டுக்கு மானமுள்ள இலங்கையர் தம் விரலை வெட்டிவிட்டே செல்லவேண்டும் - இப்படி சீறுகிறது ஜே.வி.பி.

இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதரகத்தில் விஸா பெறுபவர்களிடம் விரல் அடையாளம் கோருவது தொடர்பாக ஜே.வி.பியினரின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ஸ எம்.பி. நாடாளுமன்றத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'டொட், டொட், டொட்' நாடு எது? இந்த நாடு விஸா வழங்குவதற்கு இலங்கையர்களின் கைவிரல் அடையாளத்தைக் கேட்கிறதாம் என்று அங்கு குறிப்பிட்ட விமல் வீரவன்ஸ எம்.பி. அது குறித்து விசேட அறிக்கை ஒன்றை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை விடுக்க விரும்பும் எம்.பிக்கள் தமது அறிக்கையை சபாநாயகரிடம் சமர்ப்பித்து அவரிடம் முன்னனுமதி பெறவேண்டுமென்பது விதி. இதன்படி கடந்த புதனன்று விமல் வீரவன்ஸ அறிக்கை ஒன்றை விடுக்க சபாநாயகரிடம் அனுமதி கேட்டிருந்தார். ஆனால், அந்த விடயம் நீதிமன்றத்தில் இருப்பதால் சபாநாயகர் அதற்கு அனுமதி அளிக்கவில்லை.

சபாநாயகர் அனுமதி அளிக்காதது குறித்து சபையில் கடந்த புதனன்று சர்ச்சை எழுப்பப்பட்டது. இதை அடுத்து கடந்த வியாழனன்று அறிக்கைவிடுக்க விமல் வீரவன்ஸவுக்கு சபாநாயகர் அனுமதி வழங்கினார். ஆனால், அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நாட்டின் பெயரை சபாநாயகர் நீக்கியிருந்தார்.

விமல் வீரவன்ஸ நாட்டின் பெயரைக் குறிப்பிடாது, அந்தப் பெயர் வரும் இடங்களில் 'டொட், டொட், டொட்' என்று குறிப்பிட்டு தனது அறிக்கையை வாசித்தார். எனினும்


நாடாளுமன்றிலிருந்து...

தான் குறிப்பிடும் நாடு எதுவென்பதை விளக்கும் வகையில் அதனை வெள்ளைக்கார நாடு என்று அவர் குறிப்பிடத் தவறவில்லை. அவரது பேச்சில் கேலி தொனித்தது.

இந்த நாட்டைக் கைப்பற்றிய வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டின் வளத்தைக் கொள்ளையிடுவதற்குக் கூறிய காரணம் வேடிக்கையானது. இலங்கையர்களது அநாகரிகத்தைப் போக்கி நாகரிக புருஷர்களாக்குவோம் என அவர்கள் அப்போது கூறினார்கள். இப்போதும் தம்மைக் கௌரவப்படுத்தவே அவர்கள் கைவிரல் அடையாளத்தைக் கோருகின்றனர். சுயகௌரவமுள்ள இலங்கையர்கள் விரல்களைத் துண்டித்துக் கொண்டு அந்த நாட்டுக்கு விஸா பெற்றுச் செல்லவேண்டும். சோமாலியா நாட்டிலும் இதேபோல் விஸா வழங்கப்படுவதற்கு கைவிரல் அடையாளத்தை வழங்கவேண்டும் எனக் கேட்கப்பட்டது. ஆனால், சோமாலியா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது - இவ்வாறு விமல் வீரவன்ஸ கூறினார்.

சபையில் கேலியாகப் பேசக்கூடியவர் சபை முதல்வர் அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார. விமல் வீரவன்ஸ எம்.பி. அறிக்கை விடுத்ததும் அமைச்சர் லொக்கு பண்டார எழுந்து பேசினார்.

சோமாலியா என விமல் வீரவன்ஸ எம்.பி. குறிப்பிட்டதும் சோமீ என்ற பெயருடைய மக்கள் விடுதலைக்காகப் பேசியவரின் ஞாபகம் எனக்கு வருகிறது. அவரும் இங்கிருந்து தப்பிச் சென்று அந்த நாட்டில்தான் இருக்கிறார் - என்று கிண்டலாகக் கூறினார் அமைச்சர் லொக்கு பண்டார.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் எழுந்து, அமைச்சர் லொக்கு பண்டார மறைமுகமாகத் தெரிவித்ததைப் பகிரங்கப்படுத்தினார்.

மக்கள் விடுதலை பற்றி பேசுபவர்களின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இலங்கையிலிருந்து கள்ளத்தனமாகப் பாய்ந்துசென்று அந்த நாட்டில்தான் தஞ்சம் புகுந்துள்ளார். அவர் இப்போது அந்த நாட்டின் பிரஜை. சுயகௌரவம் இருந்தால் அவர் நாடு திரும்ப வேண்டும் என்று நெத்தியடியாகக் கூறினார் அமைச்சர் அஸ்வர்.

ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிப் பேசிய அமைச்சர் அஸ்வர், விமல் வீரவன்ஸ எம்.பியின் அறிக்கையை ஹன்சார்ட்டிலிருந்து நீக்கவேண்டுமெனவும் - சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

'நீங்கள் எழுப்பியது ஒழுங்குப் பிரச்சினை இல்லை' என்று கூறி அமைச்சர் அஸ்வரின் பேச்சை சபாநாயகர் அத்துடன் முடித்துவைத்தார். (எ)

## அரசியல் எதிரிகளை புலிகள் கொல்வதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.10

யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தமது அரசியல் எதிரிகளைக் கொலை செய்கின்றனர் என்று இரண்டு மனித உரிமைக் குழுக்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றன.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் மனித உரிமைகள் அவதானிப்பு அமைப்பு ஆகியனவே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளன என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

இலங்கையில் யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு வருகின்றனர். இது தொடர்பாகக் கிடைக்கப்பெறும் சாட்சியங்களிலிருந்து விடுதலைப் புலிகளே இக்கொலைகளைச் செய்து வருகின்றார்கள் என்பது புலனாகிறது என்று அந்த அமைப்புகள் தெரிவித்திருக்கின்றன.

புலிகள் இதுவரையில் தமது அரசியல் எதிரிகள் 36 பேரைக் கொலை செய்துள்ளனர் என்று அமெரிக்க இராஜாங்க செயலகம் அறிவித்திருக்கிறது. எனினும், சர்வதேச மன்னிப்புச சபை வெளியிட்ட குறிப்பில் 22 பேரை புலிகள் கொன்றிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய கொலைகள் நாட்டின் சமாதான சூழலை வெகுவாகப் பாதிக்கும் என்றும் அந்த அமைப்புகள் கூறியிருக்கின்றன. எனினும், இத்தகைய கொலைகளுக்கும் தமக்கும் எத்தகைய தொடர்புகளுமில்லை என்று விடுதலைப் புலிகள் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இலங்கை வானொலி செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## நல்லைக் கந்தன் சூழலில் 4 மடங்களில் அன்னதானம்

யாழ்ப்பாணம்,ஓக.10

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தினை முன்னிட்டு ஆலயச் சூழலில் அமைந்துள்ள நான்கு பிரதான மண்டபங்களில் அன்னதான நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன.

ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்களின் நலன்கருதி ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றுவரும் அன்னதான நிகழ்வில் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பதை அவதானிக்கமுடிகிறது.

நல்லூர் ஆலயத்தின் பின்வீதியில் அமைந்துள்ள நல்லை ஆதீன கலா மண்டபம், முத்துத்தம்பி மண்டபம், ஸ்ரீதுர்க்கா மணி மண்டபம், ஆலயத்தின் தேர்முட்டியடியில் உள்ள அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசைமடம் ஆகியவற்றிலேயே இந்த அன்னதான நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

தினமும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை இந்த அன்னதான நிகழ்வு இடம்பெற்று வருவதைக் காணமுடிகிறது. (எ-12-ரி)

## நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் இம்முறையும் இசை அர்ச்சனை

### கார்த்திகைத் திருவிழா அன்று நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஓக.10

நல்லூர்க் கந்தனின் கார்த்திகைத் திருவிழா நடைபெறும் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை ஆலய உள்வீதியில் கடந்த ஆண்டுகளைப் போன்று இம்முறையும் விசேட இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

உள்வீதியில் எட்டுத் திசைகளிலும் பலவிதமான இசைக் கருவிகளைப் பயன்படுத்தி இந்த இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது. இதில் மூத்த கலைஞர்களும் வளர்ந்துவரும் இளம் கலைஞர்களும் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட சில கலைஞர்கள் என்ற வரையறை அல்லாமல் துறைசார்ந்த அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் சகல கலைஞர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - அன்றையதினம் ஆலயத்தில் திருக்கதவு இரவு 9 மணிவரையும் விசேடமாகத் திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-10)

## உலர் உணவு விநியோகம்

தென்மராட்சி,ஓக.10

உலக வங்கியின் உலக உணவு நிறுவனத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட குளங்கள், வாய்க்கால்கள், வீதிகள் ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்ட பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடைகளில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வேம்பிராய், கைதடி, நுணாவில், சந்திரபுரம் ஆகிய கிளைக் கடைகளில் இந்த உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுவதாக சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமாரன் தெரிவித்தார். (எ-117)

## நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம்,ஓக.10

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்வுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு 'சமய வாழ்வு' என்னும் பொருளில் விகடகவி புலவர் மு. திருநாவுக்கரசு சொற்பொழிவாற்றுவார். (எ-10-30)

★ ★ ★


யாழ்ப்பாணம்,ஓக.10

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் கிருபாசக்தி, கருணா ஆகியோரின் பாட்டுக் கச்சேரிகள் இடம்பெறவுள்ளது.

இதில் பக்கவாத்தியக்காரர்களாக வயலின் என்.பாக்கியலட்சுமி, மிருதங்கம் எம்.சிதம்பரநாதன், கெஞ்சிரா ரி.றொபேட், முகர்சிங் கே.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ-10)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

எட்டாம் திருவிழா



### சடுதியில் மீட்டுவிடு!

குமரப் பெருங்கடவுளே குறைகளெல்லாம் தீர்ப்பவனே!
குவலயத்தி லென்று மிளமை பெற்றவனே!
அமரரிடர் தீர்த்த ஆரணங்கு மைந்தா!
ஆணவ மறுத்தோர்க் கருகினிலே காட்சி கொண்டாய்!
எமனுக்கினிப் பயனில்லை! எழுபிறப்பும் நிதானே!
ஏறுமயிலோனே உனைப் பற்றினேன்;
சமயமிது இரங்கிவிடு சஞ்சலங்கள் போதுமையா!
சாக்கடையில் தமிழினம் சடுதியில் மீட்டுவிடு.

- ஸ்ரீவாணி சிவகுமார் - உடுப்பிட்டி.

### நல்லைக் கந்தா! 'பா'க்களால் அர்ச்சிக்கிறோம்

உலகெலாம் அறிந்த நல்லையின் கந்தா!
ஈழ ஊர்கள் போற்றும் தமிழினது தலைவா!
உள்ளங்கள் பக்திப் பிரவாகத்தில் பொங்கிட
உன் பாதங்களுக்கு பாமாலைகளும் கொஞ்சமேயல்ல.

இவ்வளவு நாள்களும் சமாதானமென்று வீசிய காற்றே!
அங்கே பாருங்கள்; நல்லைக் கந்தனை என்கிறதே
ஓ. உந்தனது தாள்களை வந்தனை செய்தால்த்தானாம்.
இந்த நிலம் புனிதமுற்று வேண்டுவதெல்லாமே கிடைக்கும்

மண்மாதா! சமூகத்துச் சீர்கேடுகளால்
மௌனமாய் கலங்கி கலங்கி தலைகுனிந்து நிற்கிறாள்
விரட்டுகின்ற வகை தெரியாது திண்டாடிக் கொள்ள
வடிவேலா! வீதிகளால் உலா வருகின்றாய்.

திரண்டு திரண்டு வந்து நீயே திகைத்திட
சீரோடு வாழ்வதற்கு நிலந்தனை சீராக்கிடப்பா
எல்லாமே கிடைப்பதற்கு வழிகளைச் சமைத்திடப்பா
ஐங்கரன் தம்பியே! 'பா'க்களால் அர்ச்சித்து நிற்கிறோம்.

- மீசாலையூர் கமலா.

### நல்லூரரான் காத்தருள்வான்!

எல்லையில்லாத் துயர்தீர்ந்து எப்பவும் எம் மண்மீது
நல்லதுவே நடந்தேறி நலங்களினால்... வாழ்வோங்க
பல்லருளைத் தந்தெங்கள் பாவவினை போக்கியிங்கு
நல்லூரான் காத்தருள்வான்; நம்பித்தொழுதிடுவோம்!

- சு.க.சிந்துதாசன்
பொலிகையூர்.

### தானாக வந்திடும்

நீறு அணிந்து நித்தமும் உன்
தலம் வந்து வணங்கிட
மாறாத துயர்கள் மாறிடும்
தீராத நோய்கள் தீர்ந்திடும்
பேறாக மங்களம் மழைச்செல்வம்
சீர்சிறப்பு தானாக வந்திடும் - நல்லை
ஆறுமுகன் அற்புத அருளொளி
யால் அணைத்து இறையருளும்.

- பஞ்சாமிர்த பாலன்
கொக்குவில்.

### செந்தமிழை காத்திடப்பா!

கமலத்தில் பாரின் பசுமை நிலைக்க உதித்த
கந்தனே நல்லருள் ஈந்திடப்பா! நற்றமிழ் தழைக்க
கனடா முதல் சிங்கப்பூர் வரை கண்ட நம் செந்தமிழ் தொடக்கம்
கன்னி வரை முறையின்றி தமிழை செப்ப – பூட்டிய
கதவை திறந்த தமிழே இன்று திறந்த கதவைப் பூட்டிவிடுமோ
கசக்குதப்பா நினைக்கவே
கலிகாலம் இதுதானோ நீ தானே வரவேண்டும்
கருணை கொண்டு வேலெடுத்து நீ வந்து
கரைந்து போகும் எம் செந்தமிழை காத்திடப்பா.

- வைஇரவி.

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையில் தரம் 5இல் கல்வி கற்கும்

## செல்வி கு. நிஷாலினி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/வண். ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலயம், ஆனைக்கோட்டை.
(21255) (26-24-19-15)

# வாழ்த்துகின்றோம்

"THE ARK"

கிறிஸ்துவின் நேசக்கரம், தேவ அன்னையின் தாய்மைக் குணம் இதுவே "ஆக்". கன்னியரின் இருபத்தைந்து வருட சேவைகள், உள வளர்ச்சி குன்றிய சிறார்களுக்கு கல்வியூட்டி பலவித பயிற்சிகள் கொடுத்து சமூகத்தில் தலைநிமிர்ந்து நிற்கச் செய்த "ஆக்" ஸ்தாபனத்தில் இன்றுவரையும் பணி புரிந்த "ஆக்" இல்லத் தலைவிகள், கன்னியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த பாராட்டுக்கள். இந்நிறுவனம் பல்வேறு சவால்கள் மத்தியிலும் இருபத்தைந்து ஆண்டுகளாக யூபிலி ஆண்டில் நிறைவுகண்டு வீறுநடை போட்டு வருகின்றது. பூர்த்திசெய்யப்படாத கட்டடத்தைப் பூர்த்திசெய்வித்து யூபிலி மண்டபம் ஒன்றையும் அயராத முயற்சிகள் மூலம் நிறுவிய தற்போதைய தலைவி அருட்செல்வி அஞ்சலினா அவர்களையும் மற்றும் அருட்செல்விகள் அனைவரையும் வாழ்த்தி பணிமேலும் சிறக்க இறை ஆசி வேண்டி நிற்கின்றோம்.

*அன்புடன்:*
திரு.திருமதி செபஸ்தியாம்பிள்ளை
குடும்பத்தினர்.
உடுவில். (21260) (24-191-5)

# மரண அறிவித்தல்

## திருமதி பாலசிங்கம் தெய்வானை

கரணவாய் தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி பாலசிங்கம் தெய்வானை 03.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - லக்சுமி தம்பதிகளின் ஏகபுத்திரியும் ஆறுமுகம் - வள்ளியம்மை (சின்னத்தங்கச்சி) அவர்களின் பெறாமகளும் காலஞ்சென்ற கந்தப்பு (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), காலஞ்சென்ற இராசசிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - உணவுக் களஞ்சியம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சேதர் சிதம்பரப்பிள்ளை பாலசிங்கம் (ஓய்வுபெற்ற முகாமையாளர், லேக்ஹவுஸ், யாழ். நிறுவனம்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி சிவயோகராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை, சி.சி.ரி.எம்.எஸ். வவுனியா), திருமதி பு.புஸ்பராணி, திருமதி பா.ஜெயராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செ.சக்திதாஸ் (குருமன்காடு, வவுனியா தற்சமயம் லண்டன்), சி.புஸ்பாகரன் (ஹலோறஸ்ற், யாழ்ப்பாணம்), க.பாலச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ச.அனுஸ்காந், தனுஸ்காந், செல்வி அனுதனா (வவுனியா), பு.துவாகரன், பு.பிருந்தாபன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.08.2003 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரது மறைவுச் செய்திகேட்டு உடனே இல்லத்துக்கு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் கூறிய அயலவர்களுக்கும் உறவினர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி உதவிய அன்புள்ளங்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்திய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*வீரப்பதிராயன்,*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.* (21258) (24-19-15)
தகவல்:
குடும்பத்தினர்.

# சமய சந்நிதிகளில்

கோப்பாய்,ஓக.10

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தேர் உற்சவம் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ-10-72)

★★★

கோப்பாய்,ஓக.10

வட கோவை ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (எ-10-72)

★★★

யாழ்ப்பாணம்,ஓக.10

இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். (எ-10)

★★★

யாழ்ப்பாணம்,ஓக.10

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் திருமுறைப் பெருவிழா பொன்னாலை பிள்ளையார் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 8மணிமுதல் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (எ-10)

★★★

குருநகர்,ஓக.10

நாவாந்துறை பரலோக மாதா ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்று மாலை 6 மணிக்கு திருச்சொரூபப் பவனி நாவாந்துறை வீதிகளூடாக நடைபெறவுள்ளது.

14ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் நற்கருணை ஆராதனையும் பவனியும் இடம்பெறும். (எ-51)

## கலந்துரையாடல்

தொழில்துறைத் திணைக்கள அலுவலர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து அலுவலர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## குடும்பஸ்தரை பாம்பு தீண்டியது

தென்மராட்சி,ஓக.10

மீளக்குடியமர்வதற்காக காணி துப்புரவாக்கிய குடும்பஸ்தர் பாம்பினால் கடியுண்டார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பளை சோரன்பற்றில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை பேரம்பலம் (வயது-35) என்பவரே பாம்பினால் கடியுண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-117)

# குப்பிழான் விநாயகன் குறைதீர்க்க தேரேறி வருகின்றான்




குப்பிழான் விநாயகன் தேரேறி வருகிறான் - அன்பரின்
குறைதீர்க்க குவலயம் வளம்பெற தேரேறி வருகிறான்
எம்பக்கம் துணை சேர்க்க எழில் கற்கரையான் தேரேறி வருகிறான்
என்றும் நாம் பணிந்தேற்றும் எங்கள் விநாயகன் தேரேறி வருகிறான்
வெம்பகைகள் தேசத்தில் விலகிவிட தேரேறி வருகிறான்
விடிவிங்கே தந்துவிட விநாயகன் தேரேறி வருகிறான்
நிம்மதிகள் இம்மண்ணில் சேர்த்திட தேரேறி வருகிறான்
நிரந்தர தீர்வினைத் தமிழருக்கு தந்திட தேரேறி வருகிறான்.

கவிமாமணி, மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்
(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்).

*நேரடி அஞ்சல்*

*(நாளைய தேர்த்திருவிழா நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். சேவையில் காலை 9.00 - 11.00 மணிவரை நேரடி அஞ்சல் செய்யப்படும்.)*
*(மாலை 4.00 - 5.00 வரை பச்சை சாத்துதல் நிகழ்ச்சி).*

ஆலய பரிபாலன சபை,
குப்பிழான் கற்கரைபிள்ளையார்.
(21266) (31-14-17)


Canadian College of Business & Computers
130 Bloor St. West, Suite 901 Toronto, Ontario, Canada, M5S 1N5
Phone: 1-416-413-1234 Fax: 1-416-413-0314 e-mail: roselyn@ccbc.ca

An opportunity to be a part of the world's next trillion-dollar industry!

Fiber Optics Engineering at CCBC is supported by the Ontario Photonics Education and Training Association (OPETA), a think tank comprised of the best academic minds of Canada's Universities and internationally renowned industry leaders like JDS Uniphase.

Supported by guidance counselors, intensive English language programs, on-the-job training curriculum with 10-start dates throughout the year. All in Toronto! A trendy, upscale and very cool place to learn.

**Scholarship Application Requirements:**

1. Copy of Valid Passport
2. Educational Certificates/Transcripts
3. Employment Letter, if any
4. Fee of US $10 or LKR 1000 (Rupees)
5. Proof of sufficient funds for tuition payment and living expenses; (estimated tuition fees: US $ 1,500 to US $8,000 depending on the scholarship awarded; living expenses for two years - US $ 10,000 )

WWW.CCBC.CA

**Examination Dates:** 18th & 19th August 2003

**For Scholarship & Admission Information Contact CCBC's Authorized Educational Partners:**

Mr Ally - 692 497 / 662 547
IEMC Global - 559 766 / 7
Ms Vindya - 769 999
Mr Lal Chandrasena - 502 909
Mrs P. Sivasothy - 506 811
Mr Balakrishnan - 597 820/ 553 559
Mr Amerasinghe - 0777 345 137
Mr Fazeem Ghouse - 074 514 626
Mr Peter Selvarajah - 0777 767 818
Mr Sinaththamby - 021 222 3421
Mr Dhan Weeratunga - 075 533 339

50, Fernando Road, Colombo - 06


# ஆண்டுகளோ இன்றோடு பத்து

## ஆழ்கடலோடு நீ சங்கமித்து!

சூழ்தரையில்
03
05
1970



ஆழ்கடலில்
10
08
1993

# செல்வி இளவேணி அதிரூபசிங்கம்


ஆண்டுகளோ ஒரு பத்து ~ ஆழ்கடலோடு நீ சங்கமித்து
யாண்டும் நீ எம்முடனே ~ யாவிலும் உன் புன்னகையே!
வேண்டுகிறோம் இறையடியே ~ வேணி! உனை உளங்கொண்டே
கூண்டொத்த எம் இதயத்தே ~ கூவிடுவாய் என்றும் குயிலெனவே!
எம் உள்ளக் கமலங்களுடன் -
என்றும் உன் எழிற் கோலங்கள்.

தம்பியர்: ஆசுகன், ஆதவன்,
அக்கா - அத்தான், பெறாமகன், மைத்துனிமார், அம்மா - ஐயா.

*அம்மன் கோயிலடி,*
*வல்வெட்டித்துறை.* (20949) (2624-19-15)

# 3ஆம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம்
09
08
1975



மறைவு
10
08
2000

## செல்வி மேபல் சுதர்ஷனி குணரட்ணம்

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி,
கொழும்பு பல்கலைக்கழகம், கலைப்பீடம்)

*மூன்றாண்டு காலமும் மூன்றுயுகங்களாய்*
*மாறி மறைந்திடினும்*
*என்றென்றும் மாறாத அன்பின் வடிவமாய்*
*நின்று நிலைத்திருப்பாய்*
*அன்று நீ ஆண்டவன் அடி சென்றபோதிலும்*
*இன்றுமே வாழ்கின்றாய்*
*சுதாவே எம்முள்ளத்தில்!*

பப்பா, அம்மா, சகோதரிமார்.
(சி-29389) (19-24-15)

# கண்ணீர் அஞ்சலி



மயிலிட்டி, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
**T.M.அந்தோனிப்பிள்ளை அன்ரன் புஸ்பராசா (புஸ்பா)**
அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு:-08.10.1967
உதிர்வு :-06.08.2003

*பருத்தித்துறை.* (21264) (29-16-17-31) - உறவினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 30-11-1934



மறைவு 11-07-2003

## திருமதி அன்னம்மா பஞ்சலிங்கம்
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலமும் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த நல் உள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (21263) (32-16-17-31)
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 17 . 06 . 1917



மறைவு 20 . 08 . 2002

## திருமதி அருளம்பலம் மாணிக்கம்

**திதி - 10.08.2003**

பாரினிலே வந்துதித்த மாணிக்கமே!
பாதியிலே எம்மைவிட்டு போனதெங்கே?
பாசமும் நேசமும் குறையாது எம்முடன்
பாரெல்லாம் நின்புகழ் பேசவைத்து
பார் புகழ எம்மை யெல்லாம் வாழவைத்து
பரிதவிக்க எம்மைவிட்டு எங்கு சென்றீர்?

*கிருஷ்ண கோகுலம்,*
*கச்சேரியடி.*
(21268) (31-16-17)
என்றும் உம் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## D.M. சோமசுந்தரம்
**(ஆசிரியர் - சென். ஜோண்ஸ் கல்லூரி)**

சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட டட்டன் சோமசுந்தரம் அவர்கள் நேற்று (09.08.2003) சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr. J.M.சோமசுந்தரம் - திருமதி சோ.அழகம்மா ஆகியோரின் மகனும் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற J.T. யேசுதாசன் மற்றும் திருமதி J. தங்கம்மா ஆகியோரின் மருமகனும் திருமதி சோ. மனோன்மணி (பிராந்திய ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும் Dr. றொசாந்த், அனோஜா (Valley Bell Lanka), மினோஜா (கலைப் பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களாகிய Dr.துரைரட்ணம், திருமதி மேரி கேட்டிஸ், திருமதி எலிசபெத் கனகரட்ணம், திருமதி டொறத்தி தம்பிராஜா, செல்வி கிறேஸ் சோமசுந்தரம் மற்றும் திருமதி எமிலி நாகரட்ணம் (கொழும்பு), திருமதி திலகா சொலமன்ஸ் (கனடா), சார்ள்ஸ் சோமசுந்தரம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (11.08.2003) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இல.67, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பரியோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

*"Malvanam"*
*67, Kachcheri*
*Nallur Road,*
*Chundikuli.*
(21275) (31-16-17)

தகவல்:
திருமதி மனோன்மணி சோமசுந்தரம்,
(மனைவி).

## தனியார் பஸ் உரிமையாளருக்கான கலந்துரையாடல்

காங்கேசன்துறை வீதியில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10மணி முதல் 12 மணிவரை தெல்லிப்பழை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

பொலீஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கலந்துரையாடலில் சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித பெர்னாண்டோ, வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸ் அதிகாரி ஏ.ஈ.புஸ்பகுமார ஆகியோர் கலந்துகொள்வர். (ம-150)

## பொலீஸார் தாக்கியதாக குடும்பஸ்தர் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.10

குடும்பஸ்தர் ஒருவர் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் வைத்துப் பொலீஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கச்சாய் வடக்கு, கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த கந்தையா தில்லையம்பலம் (வயது -42) என்பவரே தாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது மனைவி குடும்பத்தகராறு காரணமாக பொலீஸில் செய்திருந்த முறைப்பாடொன்றையடுத்தே பொலீஸார் தன்னைத் தாக்கியதாக முறைப்பாட்டுக்காரர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (எ-8)

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை செல்வி க. கஸ்தூரி அவர்களின் அன்புத்தந்தையார்

**சீவரட்ணம் கனகசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/ஊரெழு கணேச வித்தியாசாலை.
(சி-29410) (31-16-17)


**லஷ்சுமி சினிமா** இணுவில்
அர்ஜுன், மனிஷாகொய்ராலா, வடிவேல், மணிவண்ணன் இன்னும் பலர் நடிப்பில்
**முதல்வன்**
பு.நேரம்: 11.00,3.00,7.00.
(21230) (31-16-17)

**நாகம்ஸ் சுன்னாகம்**
சரோஜா திரைப்படம் மூலம் திரையுலகத்திற்கு அறிமுகமாகிய நித்தியவாணி நடித்த
ஒரே தடவை 27 திரையரங்குகளில் திரையிடப்பட்டு 10ஆவது வெற்றிவாரத்தை கடந்த வெற்றி சித்திரம்
**சின்ன தேவதை**
(தமிழ்) (ரீலஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(C29232) (31-16-17)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
சாருகான், அஜித் நடித்த
**சாம்ராட் அசோகா**
(ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்)
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**Red Scorpion**
தினசரி 8.45 இரவு.
(C29213) (31-16-17)

**ராஜா** யாழ்ப்பாணம்
16.08.2003 வரை
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
**பிரியமான தோழி**
மாதவன், ஜோதிகா நடித்த (ரீலஸ்)
தினசரி: 10.30,2.30,6.30.9.30
(C/29233) (31-16-17)

**லிபேட்டி** அச்சுவேலி

அஜித்குமார், வசுந்தராதாஸ், மீனா, நக்மா மற்றும் பலர் நடித்த
**சிட்டிசன்** (ரீலஸ்)
தினசரி: 3.00, 7.00 (பு.நேரம்)
காலை 11.00 **JUDGE & JURY**
(C/29373) (31-16-17)


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



திரு. திருமதி
தர்மசீலன் - சுனித்திரா
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
**செல்வன் பவித்திரன்**

தனது முதலாவது பிறந்தநாளை ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் இன்று (10.08.2003) ஞாயிற்றுக் கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

சி.தேவராசா (அப்பப்பா),
காங்கேசன்துறை.

*உரும்பிராய் வடக்கு.* (21262) (32-16-17-31)

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 12 - 11 - 1947



விண்ணில் 10 - 08 - 2002

## அமரர் இராமலிங்கம் சிற்சபேசன்
**திதி (10.08.2003)**

*ஓராண்டு ஆயிற்றோ ஒளிவிளக்கு அணைந்து !*
*தீராத வேதனையால் துவண்டே தவிக்கின்றோம்*
*மாறாத துன்பங்கள் மறைந்து போகாதே*
*ஆறாகக் கண்ணீர் அழுதே அஞ்சலிக்கின்றோம்!*

(C/29413) (29-16-17-31) தே. லோகச்சந்திரன்.

# மரண அறிவித்தல்கள்

## T.M.அந்தோனிப்பிள்ளை அன்ரன் புஸ்பராசா (புஸ்பா)

மயிலிட்டி, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தும்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அன்ரன் புஸ்பராசா (புஸ்பா) 06.08.2003 புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் 06.08.2003 புதன்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்புறுவளை பிள்ளையார் கோயிலடி,*
*தும்பளை, பருத்தித்துறை.* (21265) (29-16-17)
தகவல்:
தாய்.

## வல்லிபுரம் ஐயாம்பிள்ளை

கலைவாணி வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும், குமரகோட்டம், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஐயாம்பிள்ளை நேற்று (09-08-2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.* (21274) (32-16-17)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி பார்வதி அம்பலவாணர்

இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பார்வதி அம்பலவாணர் அவர்கள் நேற்று (09.08.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் அவர்களின் அன்பு மனைவியும் நவரத்தினபூபதி (இளைப்பாறிய ஆசிரியை, சி.சி.த.க.பாடசாலை, இருபாலை) அவர்களின் அன்புத் தாயாரும் பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய மேற்பார்வையாளர், யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான வைத்தியர் சின்னத்தம்பி, நாசகம், பொன்னு ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-08-2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை கிழக்கு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"திருத்தணிகை"*
*கேணிக்குள ஒழுங்கை,*
*இருபாலை கிழக்கு.* (21261) (31-16-17)
தகவல்:
ச.பாலசுப்பிரமணியம்
(மருமகன்).

## வைரமுத்து நாகரத்தினம் (கற்கண்டு)

கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து நாகரத்தினம் நேற்றுமுன்தினம் (08.08.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் நவமணியின் அன்புக் கணவரும் ஐயம்பிள்ளை - பரிமளம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், பகவதி, அன்னம்மா, நடராசா மற்றும் ஐயம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜயலட்சுமி (லண்டன்), வரதலட்சுமி, பூமணி (கொழும்பு), யோகலட்சுமி, நாகசிறிகரன் (ஜேர்மனி), பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலச்சந்திரன் (கிராம அலுவலர்), பூபாலசிங்கம், இரட்ணசோதி, யோகராசா, புஸ்பராணி (ஜேர்மனி), பாமா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபராஜிதன் (லண்டன்), சிவராஜிதன் (லண்டன்), பவராஜிதன் (பிரான்ஸ்), ஜெயராஜிதன், சியாமினி (லண்டன்), டட்சுதன், றமியா, டட்பரன், துஷரா, சுகன்ஜா, சிந்துஜா, நவீதன், கலையரசி (லண்டன்), றதிகுமாரி, வினோதினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஜதுர்ஷன், ஜதீஷன், ஜனார்தன், தசீயன், அனுஜன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரம்பொன் மேற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரம்பொன் மேற்கு,*
*ஊர்காவற்றுறை.* (21267) (29-16-17-31)
தகவல்:
நவமணி (மனைவி).

## சுழிபுரம் மேற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வரை பெரும் பதற்றம் நிலவியது. அப்பகுதியில் அதிக எண்ணிக்கையான பொலீஸாரும் இராணுவத்தினரும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

பெரும் இழுபறிகளுக்கு மத்தியில் பல மணிநேரம் இடம்பெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து நள்ளிரவு 12.30 மணியளவில் இந்திய மீனவர்கள் இளவாலைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்திய மீனவர்கள் பிடிக்கப்பட்ட செய்தி அறிந்ததும் பொலஸாரும் இராணுவத்தினரும் அப்பகுதிக்கு விரைந்து அவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு வற்புறுத்தினர்.

ஆனால், "இந்திய மீனவர்களால் தாம் பாதிக்கப்படுவது அதிகரித்து வருவதாகப் பல தடவைகள் முறையிட்டபோதும், அது தொடர்பாக அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுப்பதில்லை. எனவே, இது தொடர்பான சரியான தீர்வு கிடைககும்வரை பிடித்த இந்திய மீனவர்களை பொலீஸாரிடம் ஒப்படைக்க முடியாது" என்று சவுக்கடி மீனவர்கள் தெரிவித்துவிட்டனர்.

இதனையடுத்து, கண்காணிப்புக் குழு உறுப்பினர்களும், இராணுவ உயரதிகாரிகளும், பொலீஸ் அதிகாரிகளும் அங்கு கூடினர். அவர்கள் சவுக்கடி மீனவர்களுடன் கலந்துரையாடினர்.

பெரும் இழுபறிகளின் மத்தியில் சுழிபுரம் கலைமகள் சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெற்ற கலந்துரையாடலின் இறுதியில், இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக கடற்படை அதிகாரிகள் தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை அனைவருக்குமான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்வதாக சவுக்கடி மீனவர்களுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டது.

இதனை அடுத்து கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் இந்திய மீனவர்கள் இளவாலைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை சவுக்கடி கடற்பரப்பில் உள்ளூர் மீனவர்கள் விரித்திருந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளை அப்பகுதிக்கு வந்த இந்திய ட்றோலர் படகுகள் அறுத்துவிட்டுச் சென்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால், ஆத்திரமடைந்தே மாலையில் அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்ட இந்தியப் படகுகளைக் கைப்பற்ற மீனவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மாலை 4.00 மணியளவில் சுமார் 20 இந்தியப் படகுகள் அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டுள்ளன. ஆனால், சவுக்கடி மீனவர்கள் அவற்றைப் பிடிப்பதற்காக கடலில் இறங்கியதும் ஏனைய படகுகள் தப்பிவிட வலைகளில் சிக்கிக்கொண்ட ஒரு படகு மட்டும் மீனவர்களிடம் சிக்கிக் கொண்டுள்ளது.

குடாநாட்டுக் கடற்பரப்பில் உள்ளூர் மீனவர்களால் இந்திய மீனவர்கள் பிடிக்கப்படும் சம்பவம் ஒரு வாரத்தில் இது இரண்டாவதாகும்.

(ம-29-169)

## உயர்தர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றுக் கொண்ட கல்வி வலய அதிகாரி ஒருவர் இன்று அவற்றைத் தரைவழிப் பாதை ஊடாக எடுத்துவரவுள்ளார்.

இன்று மாலையில் அவை இங்கு வந்து சேர்ந்ததும் பாடசாலை அதிபர்கள் இவற்றை யாழ். கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என கல்விப் பணிப்பாளர் ட.விக்னேஸ்வரன் தெரிவித்தார். இன்று பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளாத பாடசாலை அதிபர்கள் நாளை அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இணையத்தளத்தில் பெறுபேறுகள வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகள் தமது பெறுபேறுகளைப் பார்வையிட தொலைத்தொடர்பு நிலையங்களை முற்றுகையிட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (ம-10-ரி)

## கருகிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லினை அடுத்து பொலீஸார் சடலத்தை மீட்டனர். வவுனியா மாவட்ட நீதிபதி எம.இளஞ்செழியன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தியுள்ளார்.

இறந்த நபரின் துண்டிக்கப்பட்ட இடதுகை 200யார் தொலைவில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சடலத்தின் கழுத்தில் சங்கிலியும் கையில் மோதிரமும் இருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

சடலத்தின 10 அடி தூரத்திலிருந்து 9எம்.எம். கைத்துப்பாக்கியின் வெற்றுத்தோட்டா ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (ம-164)


TVS பாவனையாளர்களுக்கு ஒரு நற்செய்தி

எதிர்வரும் புதன்கிழமை (13-08-2003) TVS நிறுவனத்தினர் உங்கள் TVS மோட்டார் சைக்கிள்களை இலவசமாக பரிசோதிப்பதற்கு இந்தியா, கொழும்பில் இருந்து வருகை தரவுள்ளனர்.

அறிமுகம் F2



முன்கூட்டியே உங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளுங்கள்

பதிவு செய்யும் இடம்:
இல. 30, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.

சுசுக்கி ரேடர்ஸ் TVS
59, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்,
TVS LANKA PRIVATE LTD இன்
அங்கிகரிக்கப்பட்ட (3S) யாழ். முகவர்
0777-340056/222-6185



TVS வாடிக்கையாளர்களுக்கு
ஒரு மகிழ்ச்சியான
செய்தி!





எமது ஸ்தாபனத்திற்கு இந்தியாவிலிருந்தும் கொழும்பிலிருந்தும் TVS மோட்டார் சைக்கிள் கம்பனியின் பிரமுகர்களும் பரிசோதகர்களும் வருகை தர இருப்பதனால்,

எமது வாடிக்கையாளரின் நலன்கருதி 12.08.2003 செவ்வாய்க்கிழமை TVS மோட்டார் சைக்கிள் இலவச பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம் எமது நிறுவனத்தால் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மைதானத்தில் காலை 9 மணி தொடக்கம் 5 மணிவரை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஆகையால் TVS மோட்டார் சைக்கிள் வைத்திருக்கும் அனைவரும் எமது ஸ்தாபனத்தில் இன்று தொடக்கம் அதற்கான பதிவுகள் மேற்கொள்ள இருப்பதனால் உங்கள் பதிவிற்கு முந்துங்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

TVS LANKA (PVT) LTD. இன்
அங்கீகாரம் பெற்ற யாழ். TVS
மோட்டார் சைக்கிள் விற்பனை முகவர்
யசோ மோட்டார்ஸ்
163, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 222 2544.
(சி-29420) (31-14-16)


## பொ.ஐ.மு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆனால், அவ்வாறான ஒரு சந்திப்புக்குத் திட்டமிடப்படவேயில்லை எனத் தெரிவித்து அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டது ஜனாதிபதி செயலகம்.

இதனால், ஜே.வி.பி. தலைமை கடும் ஆத்திரம் அடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ம)

## நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சரியாக நடைமுறைப்படுத்தாத அரசினதும் அமைச்சர்களினதும் வருகையை மக்கள் எதிர்ப்பது நியாயமே. ஏனெனில், அவர்களுக் கான இயல்பு வாழ்வைப் பெற்றுத்தர முடியாத - தமிழ் மக்கள் உரிமையோடு வாழ்வதை ஊக்குவிக்க முடியாத - அமைச்சர்களின் வருகையால் என்ன இலாபம்? அவர்களை வரவேற்பதால் என்ன பயன்?" - என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## முட்டுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யோகபூர்வமாகக் கேட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எரிக்சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் குரங்குபாஞ்சான் முகாம் விவகாரத்தில் 'ஒரு தெளிவான முடிவு வரும் எனத் தாம் நம்புவதாகப் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாணடோ கூறியுள்ளார்.

சொல்ஹெய்மின் வன்னி விஜயத்தின்போது, இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் தீர்வுகாண விடுதலைப் புலிகள் பற்றுறுதியுடன் இருக்கிறார்கள் என்பதை மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்துமாறு அவர் விடுதலைப் புலிகளின் தலைமையைக் கோருவார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-6)

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பார்வையிடவுள்ளார். யாழ். பொது நூலகத்துக்கும் அமைச்சர் குழுவினர் செல்லவுள்ளனர்.

பிற்பகல் 2 மணியளவில் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் திணைக்களத் தலைவர்களுடனான சந்திப்பிலும் அமைச்சர் கலந்துகொள்வார்.

(ம-9-6-12-49-ரி)

## புலனாய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரு வாரங்களுக்கு முன்பே சொந்த ஊருக்குத் திரும்பி இருந்தார்.

தனது சைக்கிளில் கடைக்கு சென்றிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களால் வீதியில் வைத்து இவர் சுடப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவரது உடலில் ஐந்து துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன

(ம-6-12)

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சருடன் விளையாட்டுத் துறை அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று யாழ்.வருகின்றது. இக் குழுவினர் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கின் புனரமைப்புப் பணிகளை நேரில் சென்று பார்வையிடவுள்ளனர். (ம-8)

## சொந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செல்லும்போது பயிரிட்ட நெல்லைக் கூட அறுவடை செய்யாமல் விவசாயிகள் கைவிட்டுச் சென்றனர் என்பதை நான் நன்கு அறிவேன்.

மககளைத் தொழில் செய்யவிடாமல் தடுத்தால், அவர்கள் எத்தகைய கஷ்டங்கள், துன்பங்களுக்கு உள்ளாவார்கள் என்பதையும் நான் நன்கு அறிவேன். இத்தகைய மக்களின் நெருக்கடியான சூழ்நிலையிலேயே தென்மராட்சி, அரியாலைப் பகுதிகளில் ஒரு பகுதி நிலத்தை உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து நீக்கி விவசாய செயற்பாடுகளுக்கு விட்டுக் கொடுத்துள்ளோம்.

ஆனால், இதன்மூலம் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படலாம் என்பதையும் நாம் உணர்ந்துகொள்கிறோம். உங்களுடைய கஷ்டங்கள், பிரச்சினைகளை உங்கள் பகுதி அரச உத்தியோகத்தர்கள் மூலம் தீர்க்க முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

மக்களுக்கு செய்யக்கூடிய உதவிகள் அனைத்தையும் நாம் செய்யத் தயாராக இருக்கின்றோம். நீங்கள் ஏதாவது கோரிக்கைகளை முன்வைத்தால் அதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு மக்களுடைய நலவாழ்வுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வோம் - என்றார். (எ-9-10-86)

## சீனத் நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றுப் பார்வையிட்டார். இத்தொழிற்சாலை மின்னியல் உபகரணங்களை உற்பத்தி செய்யும் ஒரு பாரிய தொழிற்சாலையாகும்.

அங்கிருந்து இன்று காலை 6.10 மணிக்கு (சீன நேரப்படி) தலைநகர் பெய்ஜிங்கை வந்தடையும் பிரதமர் நாளை திங்கட்கிழமை பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

இன்று காலை சீன முதலீட்டாளர்கள் மத்தியில் முக்கிய உரையொன்றை ஆற்றவுள்ள பிரதமர், இலங்கையின் புனரமைப்புக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவுமாறு சீனாவிடம் கோரிக்கை விடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமரின் இந்த 4நாள் சீன விஜயததின்போது மின் உற்பத்தி, போக்குவரத்து ஆகியன தொடர்பான ஒப்பந்தங்களிலும் சீன அரசுடன் அவர் கைச்சாத்திடுவார்.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை சீன அதிபர் ஜுரொங்கோவையும் சீனப் பிரதமர் மற்றும் சபாநாயகரையும் சந்தித்துப் பேசுவார். (ம-6)


எமது புதிய
வீடியோ CD வெளியீடு
சுப்பர் குட் பிலிம்ஸின்
தித்திக்குதே
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(21276) (31)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி விமலா யோகநாதன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி விமலா யோகநாதன் அவர்கள் (நடன ஆசிரியை) கடந்த 17.07.2003 வியாழக்கிழமை அன்று நியூஸிலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகநாதன் (வழக்கறிஞர்) அவர்களின் அன்பு மனைவியும் சிவபாலன் (பாபு, நியூஸிலாந்து), ரேணுகா (ரமா, நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் கேதீஸ், பபி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.07.2003 அன்று நியூஸிலாந்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*இல.75, அம்மன் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (21183) (29-16-17-14-31)

தகவல்:
T.சண்முகநாதன்.

### M.T.திருநாவுக்கரசு

(பிரபல வர்த்தகரும் முன்னாள் உரிமையாளர் - இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்.யாழ்ப்பாணம்)

201, பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட M.T.திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (09-08-2003) சனிக்கிழமை மாலை 9.30 மணியளவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*201, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (21277) (32-14-16-17-31)

தகவல்:
T.இராஜேந்திரன் (மகன்)
(இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்.
ஸ்ரீ ரங்கநாதன் றேடர்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.